நல்லூர் இள நூலகம்.


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 18 ஞாயிற்றுக்கிழமை (01-06-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 185


# புளியங்குளம் - மாங்குளம் நோக்கி படையினர் கடும் பீரங்கித் தாக்குதல்

## அடுத்த நகர்வுக்கு முன் புலிகளின் தந்திரோபாயத்தை அறிய முயற்சி

கொழும்பு, ஜூன் 1

"வெற்றி உறுதி" (ஜெயசிகுறு) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்பினர் நேற்று புளியங்குளத்தை நோக்கியும் மாங்குளத்தை நோக்கியும் கடும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தினர். எனினும் படையினர் இன்னும் ரம்பைக்குளத்திலும் நெடுங்கேணியிலுமே தரித்து நிற்கின்றனர்.

அடுத்த நகர்வுக்கு முன் புலிகளின் தந்திரோபாயத்தை அறிவதில் இராணுவ புலனாய்வுத் துறையினர் நாட்டம் கொண்டிருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்:

வன்னி யுத்த முனையில் ஒரு சிறு மோதல் சம்பவம் மட்டுமே நேற்று இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது. எனினும் மோதல் இடம் பெற்ற இடம் குறித்துத் தெரிவிக்கப்படவில்லை.

அதே சமயம் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தமது அடுத்த கட்ட நகர்வு குறித்து தமக்குள் பேச்சு நடத்தி வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிலும், போர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு 11 லொறிகளில் நேற்று அரிசி

### இன்று மேலும் 40 லொறிகள் செல்லும்

கொழும்பு, ஜூன் 1

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கு 3 வாரங்களின் பின்னர் நேற்று 11 லொறிகள் அரிசியை ஏற்றிக் கொண்டு சென்றன. செஞ்சிலுவை சர்வதேசக் குழு இந்தலொறிகளுக்கு பாதுகாப்பு வழங்கியது.

அரசின் புதிய ஏற்பாட்டின்படி உணவுப் பொதிகள் வவுனியாவில் இருந்து மன்னார் வீதிவழியாக எடுத்துச் செல்லப்பட்டு பறையனாலங்குளத்தில் இறக்கப் படும்.

அங்கிருந்து விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப் படும் வாகனங்களுக்குள் அவை ஏற்றப்பட்டு அப்பால் எடுத்துச் செல்லப்படும். 11 லொறிகளும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு அரிசியை ஏற்றிச் சென்றுள்ளன.

இன்று 20 லொறிகள் முல்லைத்தீவுக்கும் 20 லொறிகள் கிளிநொச்சிக்கும் அரிசி, மா, சீனி என்பனவற்றை எடுத்துச் செல்ல உள்ளதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(இ-4-10-21)

## இலங்கை பற்றிய விவரண சித்திரம்: ஜப்பானிலுள்ள சிங்களவர் எதிர்ப்பு

### வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு, ஜூன் 1

ஜப்பானின் 'பியூஜி' ரெலிவிஷன் நிறுவனத்தினால் இலங்கையில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட வடபகுதி யுத்தம் தொடர்பான விவரணச் சித்திரம் ஒன்றுக்கு ஜப்பானில் உள்ள சிங்களவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு இது தொடர்பாக அவர்கள் கடிதம் எழுதி உள்ளனர்.

இந்த விவரணச் சித்திரம் ஆறு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி கடந்த 15 ஆம் திகதி ஜப்பானில் ஒளிபரப்பப்பட்டது. இரண்டாவது பகுதி இம்மாதம் 20 ஆம் திகதி ஒளிபரப்பப்பட உள்ளது,

இந்த விவரணச் சித்திரம் புலிகளுக்கு ஆதரவானது என்றும் —

அரசுக்கும் சிங்களவர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடியது என்றும் —

வடக்கு யுத்தம் தொடர்பாக தவறான தகவல்களைக் காட்டுவதாகவும் வெளிவிவகார அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்

## ஆயுதம் கைப்பற்றப்பட்ட சம்பவத்தில் பொலீஸாரால் தேடப்பட்டவர் தமிழ்க் கட்சி அலுவலகத்தில்

மட்டக்களப்பு, ஜூன் 1

சிலாபம் மட்டக்கழி இறால் பண்ணையில் ஆயுதங்கள் பிடிபட்ட சம்பவம் தொடர்பான முக்கிய சந்தேக நபர் கொழும்பில் உள்ள தமிழ்க்கட்சி ஒன்றின் அலுவலகத்தில் தங்கி இருப்பதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சில தினங்களுக்கு முன்னர் சிலாபம் இறால் பண்ணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



நாட்டை விட்டு போனவைக்கு நாட்டுப்பற்று வந்திருக்கு பாருங்கோ......!

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 1

காங்கேசன் துறையிலிருந்து திருமலைக்கு இன்று 500 பயணிகளுடன் கப்பல் சேவை இடம்பெறவிருப்பதாக சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பட்டியல் இல: 561 — 580 இல் உள்ளோரில் இக்கப்பலில் பயணம் செய்யப் பெயர்களைப் பதிவுசெய்தவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-ஐ)

## தி. மு. க. நாளை முடிவு செய்யும்

சென்னை, ஜூன் 1

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழ் நாட்டில் நடைபெற உள்ள ஹர்த்தாலில் கலந்து கொள்வதா அல்லது இல்லையா என்பது குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாருக்கிடையில் ஏற்பட்ட தகராறு துப்பாக்கிச்சூட்டில் முடிவு

### ஒருவர் பலி; ஊர்காவலர் காயம்

திருகோணமலை மாவட்டம் மொறவெவ பொலீஸ் நிலையத்தில் இரு பொலீஸாருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒரு பொலீஸார் சுட்டுக் கொல்லப்பட்டார். ஊர்காவல் படையினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

## மன்னாருக்கான உணவு தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 1

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை பாதுகாப்பு அமைச்சு நீக்கியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் சுமார் 78 ஆயிரம் குடும்பங்களுக்காகப் படையினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள மடுச் சந்தியிலும், உயிலங்குளத்திலும் இரு உணவு விநியோக நிலையங்களைத் திறந்திருந்தனர்.

எனினும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து இங்குவந்து உணவுப்பொருள்களைப் பெற இந்தக் குடும்பங்கள் முன்வரவில்லை.

உயிலங்குளத்தில் உள்ள உணவு விநியோக நிலையத்துக்கு மட்டும் 23 குடும்பங்கள் வந்து உணவுப் பொருள்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ப. நோ. கூ. சங்க தலைவர் கைது!

### இராணுவ தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 1

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நிதியை அறவிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அண்மைக் காலத்தில் பல தடவைகள் முயற்சித்துள்ளனர்.

இது தொடர்பாக மானிப்பாயில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுடன் 19-05-97 முதல் 28-05-97 வரை பல தடவைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் சுதாகர் என்பவரும் வேறு சிலரும் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருக்கின்றார்கள்:

அவர்கள் தமக்கு இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L DAY CLASS

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | ஆர். செல்வவடிவேல் |
| கணிதம் | — | கே. சங்கர் |
| சமூகக்கல்வி | — | கே. எஸ். முத்துலிங்கம் |
| ஆங்கிலம் | — | எஸ். கே. மகாலிங்கம் |
| தமிழ் / சமயம் | ] | கே. சிவம் |
| வர்த்தகம் | — | கே. கருணாகரன் |

**ஆரம்பம்: 2 - 6 - 97** காலை 8 00 மணி

## புதிய நாவலர் கல்வி நிலையம்

**ஆனைப்பந்தி.**

(47558)


# கண்ணீர் அஞ்சலி

வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியர்
திரு. க. குணம் அவர்களின் சகோதரராகிய

## க. பாலுவும்

அவர்களது குடும்பத்தினரும் 28-5-97 இல் அகால மரணமானதையிட்டு

அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரிய கழகமும்**
**மாணவர்களும்**

யா. வட்டு. இந்துக் கல்லூரி,
சித்தன்கேணி. (47553)

# இதய அஞ்சலி

எமது சக நண்பன்
ச. பவநாதனின் பாசமிகு தந்தை

## அ. சண்முகநாதன்

31-5-97 இல் இறைவனடி சேர்ந்ததையிட்டு அவருக்கு எமது இதய அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

**கு. காமேஸ்வரன் (காமேஸ் ஸ்ரோர்ஸ்)**
**கோயில்வீதி, கொக்குவில்** (47259)

# மரண அறிவித்தல்கள்

## சேவியர் (பெர்னாண்டோ) நவமணி

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த சேவியர் (பெர்னாண்டோ) நவமணி 30 - 05 - 97 அன்று கொழும்பில் காலமானார். இவரது நல்லடக்கம் 01 – 06 - 97 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குக் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பொ. மகேந்திரன் (சகோதரன்)
அ. சின்ராசா (லக்ஸ்மாலா) (மைத்துனன்)
மு. வின்சலேஸ் (மருமகன்)

83/11 பீச்றோட்,
குருநகர்,
யாழ்ப்பாணம். (47557)

## இராமுப்பிள்ளை பொன்னம்பலம்

கொக்குவில் மேற்கு அரசடியை வசிப்பிடமாகக் கொண்ட இராமுப்பிள்ளை பொன்னம்பலம் 31-5-97 இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற படவரைஞர்), காலஞ்சென்ற அன்னலட்சுமி இராமச்சந்திரன் (கலைவாணி ஆடை அகம், நவீன சந்தை, யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன், தனபாலச்சந்திரன் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலரஞ்சினி, பாக்கியலட்சுமி, அருந்சதி, சத்தியாதேவி, நித்தியரஜினி, பாலசுப்பிரமணியம் (ஆனந்தகி புடைவையகம், நவீன சந்தை, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோதினி, சுகன்யா, சாந்தரூபி, சுபாகாந்தன், கலைவாணி, மதனகாந்தன், விஷ்ணுகாந்தன், கலையமுதன், ஸ்ரீபிரசாத், ரவிசங்கர், சஞ்சீவன், சந்தியா, கீர்த்தனா, வினோஜன், சுவீதா, ரூபிகா, ரூபனி, ஐங்கரன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், கனகரத்தினம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவப்பிரகாசத்தின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. இராமச்சந்திரன் (மகன்)

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (47545)

# 30 பேருக்கு மூக்குகண்ணாடி

தென்மராட்சி, ஜூன் 1

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த மாதங்களில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாம்களில் கண்ணாடி பெறுவதற்குத் தகுதிபெற்ற வறுமைக் கோட்டின் கீழ்வாழும் 30 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கும் வைபவம் இன்று காலை 10.00 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறும்.

கழகத் தலைவர் லயன் இ. கமலநாதன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் சாவகச்சேரிமாவட்ட நீதிபதியும், நீதிவானுமாகிய எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்குவார். (இ-117)

# மேயரின் மனைவி தாலிக்கொடி அபகரிப்பு

மட்டக்களப்பு மாநகர சபை மேயர் செழியன் பேரின்பநாயகத்தின் மனைவியின் தாலிக்கொடி இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டது.

மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் பாடசாலை ஆசிரியையான அவர் பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் போது கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-21)

# விசேட அ. அட்டை விநியோகம்

யாழ் நகர் கிழக்கு ஜே—74 பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 00 மணி முதல் பிற்பகல் 4 00 மணி வரை கிராம அலுவலர் பணிமனையில் வைத்து வழங்கப்பட உள்ளன. (ஐ-5)

# புளொட் கிளை அலுவலகங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 1

புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் கிளை அலுவலகங்களைத் திறந்து அரசியல் புனர்வாழ்வு வேலைகளை ஆரம்பிக்க உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# சப்பாத்துகள்

கொரியத் தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட மாணவர்களுக்கான சப்பாத்துகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**வதனி மருந்தகம்**
பஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி
(சி/843)

இன்றைய ஒறிஜினல் வெளியீடு
சரத்குமார், ராஜசேகர்
**மீசைக்காரன்**
விஜயகாந்தின்
**ஆனஸ்ட் ராஜ்**
பிரதி ஒன்று 350/- ரூபா
**வீடியோ விஷன்**
யாழ்ப்பாணம்
(47559)

# ஞானோதயா அக்கடமி

கண்டி வீதி, சாவகச்சேரி.

## AL 99

| | | |
|---|---|---|
| பொருளியல்:- | — | திரு. அன்ரனி |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| கணக்கியல் | — [ | திரு. இராஜேந்திரன் / திரு. பார்த்தீபன் |
| வணிகப்புள்ளிவிவரவியல் | — | திரு. தவசேகர் |
| தமிழ் | — | திரு. அமரசிவம் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | ] — | செல்வி சுதாமதி |
| அரசியல் | — | திரு. பொன் சந்துரு |
| புவியியல் | — | திரு. ராஜன் |

**ஆரம்பம்:- 02-06-97**

(47555)


# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சண்முகநாதன் 31-05-97 இல் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் குணபாலலெட்சுமி ஆகியோரின் அன்புக்கணவரும், கிருபாகரன் (ஆசிரியர், கோண்டாவில் றோ. க. த. க. பாடசாலை), சகிலா (1995 A/L வேம்படி மகளிர் கல்லூரி) கடம்பரூபன், (1995 A/L யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான இராமசாமிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளினதும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் திருமதி சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், கேதாரகௌரியின் (கனடா) பாசமிகு அண்ணாவும், குமரப்பெருமாள் (இளைப்பாறிய நிலவளவை அத்தியட்சகர், கனடா), டாக்டர் பரராசசிங்கம், நாகரெத்தினம், தனலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, திருநாவுக்கரசு (சமாதான நீதிவான், மரண விசாரணை அதிகாரி, நயினாதீவு), காலஞ்சென்ற இராஜ இராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும், திருமதி சுபாசினி, ஸ்ரீகுமார், திருமதி வனஜா ஆதித்தன், சுரேஷ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01-06-1997) பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி குணபாலலெட்சுமி சண்முகநாதன் (மனைவி)

11/7 சந்தன மாதா கோயில் ஒழுங்கை,
சுண்டிக்குளி. (47550)

## துரைச்சாமி சச்சிதானந்தம்

(வர்த்தகர், கொழும்பு)

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைச்சாமி சச்சிதானந்தம் 29-05-97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, நாகம்மா ஆகியோரின அன்பு மகனும், இராசநாயகியின் (மைசூர்) அருமைக் கணவரும், சசிகலா (கனடா), சசிகாந்தன் (கொழும்பு), சசிரேகா, கமலசொரூபி, சுரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகபாலனின் அன்பு மாமனாரும், ஆரணியாவின் அன்புப் பேரனும், கமலநாதனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 37A, வில்லி அவனியூ, வெள்ளவத்தையில் வைக்கப்பட்டு, தகனக் கிரியைகளுக்காக இன்று (1-6-97) ஞாயிற்றுக்கிழமை பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
கி. இராமநாதன் (ராசு) (மைத்துனர்)

(47532)

## அப்பையா சண்முகநாதன்

கோணாமலை வீதி, கொக்குவிலைச் சேர்ந்தவரான அப்பையா சண்முகநாதன் அவர்கள் நேற்றுக் காலை (31 - 05 - 1997) காலமாகி விட்டார்

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சோதிநாதன் (ஜேர்மனி), செல்வநாதன் [ஜேர்மனி], ஜெகநாதன் [சுவிஸ்], பவநாதன், கமலராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராஜா, திருச்செல்வம், பூமாதேவி, தயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01 - 06 - 1997 இன்று காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
அருணகிரிநாதன்

கோணாமலை வீதி,
கொக்குவில் [47546]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காபிரிக்க நாடுகளின் ராணுவத் தலையீடு
# சியராலியோனில் எந்நேரமும் இடம்பெறலாம்
## தடையைமீறி வெளிநாட்டவர் அங்கிருந்து ஹெலி மூலம் வெளியேற்றம்

பிரீரவுண் ஜூன் 1

சியராலியோன் நாட்டில் சதிப்புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட அதிபர் அகமட் டெஜான் கபாவை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக பிராந்திய நாடுகளின் கூட்டு இராணுவ நடவடிக்கை ஒன்று எந்நேரமும் அங்கு இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கென்யா தலைமையில் கூட்டுஇராணுவ நடவடிக்கைக்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் அமைதிப் படையாக சியராலியோனில் நிலைகொண்டுள்ள நைஜீரிய நாட்டுப் படையினர் தமது பலத்தை அங்கு அதிகரித்து வருகின்றனர். மேலும்பெரும் எண்ணிக்கையான துருப்புகள் அங்கு போய்ச் சேர்ந்துள்ளன. இந்த அமைதிப் படையில் கினி நாட்டுப் படையினரும் இடம் பெற்றுள்ளனர்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய நாடுகளில் அமைதியை நிலை நாட்ட இப்பிராந்தியப் படைகள் அந்த நாடுகளில் நிலை கொண்டுள்ளன.

ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவ ஆட்சியாளர்கள் நாட்டின் எல்லைகளை மூடி விமானப் போக்குவரத்தையும் தடை செய்துள்ளனர்.

ஆனால் இந்தத் தடையையும் மீறி வெளிநாட்டுப் பிரஜைகளை அங்கிருந்து வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது.

சுமார் 700 வெளிநாட்டவர்கள் ஹெலிகள் மூலம் பிரீரவுணில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்க கடற்படையினரின் உதவியுடன் அமெரிக்கப் பிரஜைகளும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை-

ஆட்சிக் கவிழ்ப்பை முறியடிக்க படை பலம் பயன்படுத்தப்படுவதை எதிர்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கென்யா தலைமையில் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் அமைதிப்படையினர் சியராலியோன் விவகாரத்தில் தலையிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பிரச்சினையை இராஜதந்திர ரீதியாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சியராலியோனின் தலைநகரான பிரீரவுணுக்கு தனது படைகளையும் இராணுவ வாகனங்களையும் கென்யா அனுப்பி உள்ளது என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

# விமானத்தின் பறக்கும் உயரம் திடீரென 1,000அடி குறைந்தது!
## 20 இந்தியப் பயணிகளுக்குக் காயம்!!

புதுடில்லி, ஜூன் 1

புதுடில்லியில் இருந்து மும்பாய் நோக்கிப் பறந்து கொண்டிருந்த இந்தியன் எயர்லைன்ஸ் 'ஜெற்' விமானம் ஒன்று நடுவானில் பறந்து கொண்டிருந்த சமயம் அதன் பறக்கும் உயரம் ஆயிரத்து 100 அடியாகக் குறைந்தது.

இதனை அடுத்து அந்த விமானம் வானில் திடீரெனக் கீழ் நோக்கி விழுந்து பின்னர் தொடர்ந்து பறந்தது.

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த திடீர்ச் சம்பவத்தினால் விமானத்தில் இருந்த 20 பயணிகள் காயமடைந்தனர்.

முன்னாள் சிவில் விமானத்துறை அமைச்சர் குலாம் நபி ஆஸாத் மற்றும் கேரள மாநில ஆளுநர், அவரது மனைவி, மாநில எம். பிக்கள் உட்படப் பல முக்கிய பிரமுகர்களும் இந்த விமானத்தில் பயணம் செய்தனர்.

(ஐ 5)



# மூப்பனாருடன் சோனியா இரகசியப் பேச்சுவார்த்தை!
## புதிய அணி அமைக்க முயற்சி?

புதுடில்லி, ஜூன் 1

சோனியா காந்தியின் அரசியல் பிரவேசம் தொடர்பாக தமிழ் மாநில காங்கிரஸின் தலைவர் ஜீ. கே. மூப்பனாருடன் திருமதி சோனியா காந்தி இரகசியப் பேச்சு நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வெளிநாட்டவர் ஒருவரை காங்கிரஸ் கட்சித் தலைமையில் அமர்த்த எடுக்கப்படும் முயற்சிகளை எதிர்த்து வருவோர் மத்தியில் சோனியா காந்திக்கு ஆதரவாக திரு. மூப்பனார் பகிரங்கமாகப் பேசி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அன்னி பெசன்ட் அம்மையார், அன்னை தெரேஸா போன்ற வெளி நாட்டவர்களின் சேவையைச் சுட்டிக் காட்டி சோனியா காந்திக்கு ஆதரவாக மூப்பனார் பிரசாரம் செய்து வருவதாக தமிழக சஞ்சிகை ஒன்று அவர் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.



கடந்த செவ்வாயன்று சென்னையில் உள்ள சத்திய மூர்த்திபவனுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட சோனியா காந்தி மூப்பனாருடன் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்துப் பேசியதாக தமிழ் மாநில காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் புதுடில்லியில் இருந்து சோனியா காந்தி மூப்பனாருடன் தொலை பேசியில் தொடர்பு கொ டமை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மூப்பனாருடன் இணைந்து வலுவான காங்கிரஸ் அணி ஒன்றை சோனியா தலைமையில் உருவாக்கும் திரை மறைவு நடவடிக்கைகள் புதுடில்லியில் இடம்பெற்று வருவதாக தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

(ஐ)

# சோனியாவுக்கு விட்டுக் கொடுத்து போட்டியில் இருந்து விலகத் தயார்!
## கேசரி, சரத்பவார் அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 1

சோனியா காந்தி காங்கிரஸ் தலைமைப்பொறுப்பை ஏற்க முன்வந்தால் காங்கிரஸ் தலைவர் தெரிவுக்கான தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தாங்கள் விலகிக் கொள்வதாக சீதராம் கேசரியும். சரத்பவாரும் அறிவித்துள்ளனர்,

காங்கிரஸ் கட்சியின் ஐக்கியத்தைக் கருத்திற் கொண்டு திருமதி சோனியா காந்தி கட்சித் தலைவராக வர இணங்கினால் தாம் போட்டியிலிருந்து விலகுவதாக தற்போதைய தலைவர் சீதாராம் கேசரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

புதிய தலைவரை கருத்து ஒற்றுமை மூலம் தேர்ந்தெடுக்கலாம் என்றும், கட்சித் தலைவர் தேர்தலில் போட்டியைத் தடுப்பது நல்லது; ஆனால், தவிர்க்க முடியாமற் போனால் அதை கௌரவமாக நடத்த வேண்டும் என்றும் கட்சித்தலைவர் தேர்தலுக்குப் பின்னர் எத்தகைய கசப்புணர்வும் இருக்கக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சோனியாகாந்தி காங்கிரஸின் தலைவர் பதவியை ஏற்க வேண்டும் என்று தாங்களும் வலியுறுத்தி வருவதாக சரத்பவாரின் சார்பில் பேசிய ஏ. ஆர். அந்துலே தெரிவித்தார். இதே வேளை —

காங்கிரஸ் தலைவர் போட்டியிலிருந்து தாம் ஒருபோதும் விலகப் போவதில்லை என்றும் -

கட்சித் தலைவர் தேர்தலில் அநாவசியமாக சோனியா காந்தியின் பெயரை இழுக்கக் கூடாது என்றும் மற்றொரு வேட்பாளரான ராஜேஸ் பைலட் தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலுக்கு எச்சரிக்கை

மத்தியகிழக்கு அமைதி முயற்சிசீர்குலைந்தால்எகிப்து இஸ்ரேலின் பகை நாடாகி விடும் என்று இஸ்ரேலிய புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுடன் 1979 இல் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை மதித்து நடக்க எகிப்து கடமைப்பட்டிருப்பினும், சூழ்நிலை காரணமாக இஸ்ரேலுக்கு எதிரானதாக அது மாறக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## அமெரிக்கா கோரிக்கை

ஜகார்த்தா, ஜூன் 1

இந்தோனேசியா தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருமாறு அமெரிக்கா கேட்டுள்ளது.

தற்போதைய தேர்தல் முறையானது ஆட்சியிலிருக்கும் அதிபர் சுஹார்ட்டோவும், அவரது கோல்கர் கட்சியும் வெற்றி பெறுவதற்கெனவே வடிவமைக்கப்பட்டது என்றும்-

எதிர்க்கட்சிகளும் அதற்கு நிகராக நின்று போட்டியிடுமளவுக்கு அது சீரமைக்கப்பட வேண்டும் என்றும்- அமெரிக்கா கோரியுள்ளது.

(ஐ-5)

## பெருநாட்டில் நீதிபதிகள் போர்க்கொடி

லீமா, ஜூன் 1

பெருநாட்டு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிவிலகி உள்ளார்.

தனது சக நீதிபதிகள் மூவர் அதிபர் பிஜு மோறியால் பதவிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்தும், பதவி நீக்கப்பட்ட நீதிபதிகளுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தும் தான் பதவி விலகுவதாக அவர் அறிவித்தார்.

ஏற்கனவே இரண்டுமுறை பதவி வகித்துள்ள அதிபர் பிஜு மோறி மீண்டும் மூன்றாம் முறையாக அதிபர் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதை இந்த நீதிபதிகள் எதிர்த்து வந்தனர்.

(ஐ-5)

## ஜனாதிபதி தேர்தலில் உலக அழகி

மணிலா, ஜூன் 1

வெனிசுவேலாவின் முன்னாள் உலக அழகி ஜரீன் ஸாயேஷ் அந்த நாட்டு அதிபர் தேர்தலில் வேட்பாளராகக் குதித்துள்ளார்

அவருக்கு அங்கு பெரும் வரவேற்பு இருப்பதாக மக்கள் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன. தனது கட்சியின் பெயரையும் அவர் ஜரீன் என்றே வைத்துள்ளார்.

தற்போது அதிபராக இருக்கும் 81 வயதானரவ் வேல் கல்டேரா பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்காது இழுத்தடிப்பவர் என்றும் —

அதற்கு மாறாக ஜரீன் உடனடித்தீர்வுகள் எடுப்பதில் பேர் பெற்றவர் என்றும் — கூறப்படுகின்றது.

(ஐ-5)

உலக அரங்கில்

## போலந்தில் பாப்பரசர்

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் தமது தாய்நாடான போலந்துக்கான 11 நாள் விஜயத்தை நேற்று ஆரம்பித்தார்.

போலந்து கம்யூனிஸ முறையில் இருந்து ஜனநாயக ஆட்சி முறைக்கு மாறிவரும் காலகட்டத்தில் பாப்பரசர் தமது தாய்நாட்டுக்கு மேற்கொள்ளும் இந்த விஜயம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

போலந்தில் பொதுத் தேர்தல் பிரசாரம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில், பாப்பரசர் அங்கு விஜயம் மேற்கொள்கின்றார் அவர் போலந்துக்கு மேற்கொள்ளும் 7 ஆவது விஜயம் இதுவாகும்.

(ஐ 5)

## ஆசியானில் பர்மா

கோலாலம்பூர், ஜூன் 1

''ஆசியான்'' என அழைக்கப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம் பர்மா, கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளிற்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதல் பூரண அங்கத்துவம் வழங்கவுள்ளது.

மலேசிய வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா அஹமட் வஸாபி கோலாலம்பூரில் நேற்று முடிவடைந்த ஆசியான் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் பற்றி அறிவித்தார்.

புதிய நாடுகளுக்கு அங்கத்துவம் வழங்குவது பற்றி தீர்மானிப்பதற்காக இந்த விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இராணுவ ஆட்சி நிலவும் பர்மாவிற்கு அனுமதி வழங்குவதை பின்போடும்படி மேற்கு நாடுகளும் மனித வுரிமை ஸ்தாபனங்களும் மேற்கொண்டும் வற்புறுத்தல்கள் மத்தியில் ஆசியான் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் நடைபெற்றது

(ஐ-5)

## "எயிட்ஸ்" தடுப்புமருந்து

கேம்பிறிஜ், ஜூன் 1

'எயிட்ஸ்' நோய்க்கு எதிரான பயனுள்ள தடுப்பு மருந்து ஒன்றைக் கண்டு பிடிப்பதற்கு இன்னும் 10 வருடங்கள் போகாது.

எயிட்ஸ் தடுப்பு மருந்து ஆய்வுக் குழுவின் தேசிய நிலையத்தின் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு எம்மை ஒதுக்குமேயானால் எமது முடிவைத் தீர்மானிப்போம்

## அமைச்சர் ஸ்ரீமானி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

''எமது கட்சி இன்றியே தனித்துச் செயற்பட முடியும் என அரசு கருதினால் அல்லது எம்மை ஒதுக்கினால் எமது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிப்போம்.''

போக்குவரத்து மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து மகளிர் விவகார சுற்றாடல் துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் எமது கட்சி முன்வைத்த பல்வேறு கோரிக்கைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை.

எனினும் இதன் மூலம் நாம் அரசைவிட்டு ஒதுங்கி விடப் போவதில்லை.

என்னை அமைச்சரவையில் இருந்து ஒதுக்கிவிட வேண்டும் என அமைச்சரவையில் உள்ள ஒருவர் தீவிரமாக முயற்சி மேற்கொள்கிறார்.

இது என் மீது தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட பகைமையாகும்— என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வலயம்-2 தமிழ்த் தினவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். கல்வி வலயம் இரண்டின் வலய மட்ட தமிழ்த்தினவிழாப் போட்டிகள் நாளை 2ஆம் திகதியும் 3 ஆம், 4ஆம் திகதிகளிலும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. (ஐ)

## தென்னம் நாற்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

நல்லூர் கமநலசேவைகள் கேந்திர நிலையம் நல்லின தென்னம் நாற்றுக்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக நல்லூர் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

தென்னம் நாற்றுக்களைப் பெற விரும்புவோர் முன் கூட்டியே கமநலசேவைகள் கேந்திர நிலையத்தில் பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். [ஐ-5]

போதை வஸ்து ஒழிப்பு:

## பாடசாலை மட்டத்தில் நாடகப் போட்டி

வடமராட்சி, ஜூன் 1

போதைவஸ்துப் பாவனையால் உண்டாகும் தீங்கு பற்றி விளக்கும் நாடகப் போட்டி பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். யோகநாதன் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

முதலாம் பிரிவில் தெரிவாகும் நாடகத்துக்குப் 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பிரிவில் தெரிவாகும் நாடகத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பிரிவில் தெரிவாகும் நாடகத்துக்கு 3 ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படும்.

போதைவஸ்துப் பாவனையை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையின் பேரிலேயே இந்நாடகப் போட்டி நடத்தப்படவுள்ளது. (ஐ-173)

## புளொட் அனுதாபம்

வன்னியில் இருந்து அகதிகளை ஏற்றிவந்த படகு நாச்சிக்குடா கடற்பகுதியில் கவிழ்ந்ததில் 19 அகதிகள் உயிரிழந்த சம்பவம் குறித்து புளொட் இயக்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதாக புளொட்டின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தினர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பொது நூலகத்துக்கான நட்ட ஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

திராவிட சிற்பவியல் பாங்கில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததும், தெற்கு ஆசியாவிலேயே பெரிய நூலகங்களுள் ஒன்றாகத் திகழ்ந்ததுமான யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையம் 1981 ஆம் ஆண்டு ஜூன் முதல் நாள் நள்ளிரவில் தீக்கிரையாக்கப்பட்டது. இது ஒரு பெரும் பண்பாட்டுப் படுகொலையாகும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். நூல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்ட பதினாறாவது நினைவு தினம் இன்றாகும்.

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிந்து கொண்டிருந்த கோரக் காட்சியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் மேல் மாடியில் இருந்து காண நேர்ந்த அதிர்ச்சியினால் மூர்ச்சையுற்ற பன்மொழிப் புலவர் வண. பிதா தாவீது அடிகள் மயங்கிய நிலையிலேயே உயிர் நீத்தார். நடமாடும் நூலகமாக விளங்கிய அடிகளார் மறைந்தார் என்னும் செய்தி யாழ். நகர பிதா இராஜா விசுவநாதன் மரணமடைந்ததாக மாறி வதந்தியாகப் பரவியது. பிலிப்பீன்ஸில் இருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலிச் செய்தியிலும் அவ்வாறாகவே பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இப்போதைய முயற்சி போன்றே அப்போதும் அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வு காணும் நோக்கத்துடன் மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்க இணக்கம் ஏற்பட்டிருந்தது. யாழ்ப்பாணமாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நாச்சிமார்கோயில் வீதியில் யாழ். மாநகர முதல்வர் இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாவட்ட அபிவிருத்தி சபைகளை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக ஏற்க மறுத்த தீவிரவாத இளைஞர் குழுஒன்று கூட்டத்தில் நிகழ்த்திய துப்பாக்கிப் பிரயோகத்தால் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் (பண்டாரா என்பவர்) கொல்லப்பட்டார். அதனை அடுத்து யாழ். நகரில் கட்டவிழ்த்துவிடப்பட்டவன் செயல்களைத் தொடர்ந்தே யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. ஆகையால் மேலே தெரிவிக்கப்பட்ட வதந்தி உண்மைச் செய்தியாகவே எடுத்துக் கொள்ளப்பட்டதில் வியப்பில்லை.

நூலகத்தைச் சட்டத்தின் காவலர்களே எரித்தார்கள் என்ற உண்மை உலகெங்கும் பரவியது. தனது குற்றத்தை ஏற்றுக்கொள்ளப் பின்னின்றாலும் அரசு நிவாரணம் வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

சமகாலத்தில் அதாவது 1981 மார்ச் 31 —க்கும் ஜூன் 3 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வன்செயல்களால் விளைவிக்கப்பட்ட சொத்துக்களுக்கான சேதங்களை மதிப்பீடு செய்து வழங்கப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகைகளைப் பரிந்துரைத்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் லயனல் பெர்னான்டோ தலைமையில் தனிநபர் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

மேற்படி விசாரணைக்குழு அதன் அறிக்கையில் செய்திருந்த ஏனைய பரிந்துரைகளுடன் எரிந்த யாழ். நூலகத்துக்கு வழங்கப்படவேண்டிய நட்டஈடாக ஒரு கோடி இரண்டு இலட்சம் ரூபாவுக்கான ஒரு தொகையைப் பரிந்துரைத்திருந்தது.

சம்பந்தப்பட்ட மேற்படி லயனல் பெர்னான்டோ விசாரணைக் குழு அறிக்கையில் காணும் பரிந்துரையின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளை நிறைவேற்றும்படி யாழ். அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலம் விடுக்கப்பட்டிருந்த அரச அறிவுறுத்தலில் யாழ். பொது நூலகத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டு இருந்த தொகையை மட்டும் புறநீங்கலாகக் குறிப்பிடப்படாமல் தவிர்த்திருந்தது.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத் தொகுதியின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளடங்கப் பாதிக்கப்பட்டிருந்த ஏனைய அனைவருக்கும் அவர்களுக்குச் சேரவேண்டிய நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் யாழ். அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டிருந்தன.

யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டதற்கான குற்றப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளாது தவிர்க்கும் பொருட்டாகவே நூலகத்துக்கு வழங்கப்படவேண்டிய தொகை மேற்படி அறிவுறுத்தலில் இருந்து புறநடையாக விடப்பட்டிருத்தல் வேண்டும்.

யாழ். பொது நூலக விவகாரம் வேறு விதமாக அணுகப்பட்டது. ஜனாதிபதி நம்பிக்கை நிதியில் இருந்து பத்து இலட்சம் ரூபாவுக்

**த. இன்பரசு**

கான ஒரு தொகையை விடுவித்து ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பொது நூல் நிலையப் புனரமைப்பு நிதி எனும் பெயரில் அத்தொகையை முதலாக இட்டு ஒரு புதிய வங்கிக் கணக்கு திறக்கப்பட்டது. அந்த நிதிக்கு நன்கொடைகள் வழங்குமாறு பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இவ்வாறு ஜனாதிபதி நம்பிக்கை நிதியில் இருந்து பெறப்பட்ட பத்து இலட்சம் ரூபாவுக்கான நிவாரணத்துடன் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற நன்கொடைகளையும் சேர்த்து யாழ். பொது நூலகத்துக்கு இருபது இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருந்தது.

யாழ். நூல் நிலையத்தின் ஒரு பகுதி புனரமைக்கப்பட்டு 1984 ஜூன் மாதம் 4 ஆம் திகதி மீள்விக்கப்பட்டது. எனினும் ஒரு சில வருடங்களில் அதனை பயன்படுத்த முடியாத நிலை தோன்றியது.

அப்போதைய ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா 1986 ஜூலைத் திங்களில் ஒரு சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தியிருந்தார். இம் மாநாட்டில் உள்நாட்டுப் பத்திரிகையாளர் யாரும் அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை.

இம் மாநாட்டில் பத்திரிகையாளர்களால் விடுக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் —

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காகத் தம்மால் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த விசேட பொலீஸாரே 'யாழ். நகர மண்டபத்தைத் தீக்கிரையாக்கியிருந்தார்கள்' என்று — ஜெயவர்த்தனா பதிலளித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்டது 'நூலகமேயன்றி' நகர மண்டபம் அல்ல! இந்தக்குட்டு உடைபடாது காத்துக் கொள்ளவே அம் மாநாடு சர்வதேச பத்திரிகையாளருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

1987 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தின் போது (1986 நவம்பரில்) பிராந்திய அமைச்சுக்கான விவாதத்தின் போது அப்போதைய அத்தனகலைத் தொகுதிநாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி, யாழ். நூலகத்துக்கு லயனல் பெர்னான்டோ விசாரணைக் குழு பரிந்துரைததிருந்த ஒரு கோடி ரூபா நட்ட ஈடு வழங்கப்பட்டிராமையை அம்பலப் படுத்தியிருந்தார்.

அதே போன்று —

இத்தீவில் நிகழ்ந்த முதல் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கொப்பேகடுவ யாழ். திறந்த வெளியரங்கில் தாம் நடத்திய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது, அருகேயிருந்த எரிந்த நூலகக் கட்டடத்தை அவையினருக்கு சுட்டிக் காண்பித்து மேற்படி நூலகத்துக்கு லயனல் பெர்னான்டோ குழு பரிந்துரைத்திருந்த ஒரு கோடி இரண்டு இலட்சம் ரூபா நட்டஈட்டை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு வழங்கத் தவறியமையைக் கண்டித்தார். ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றியடைந்தால் அத்தொகையை வழங்குவார் என்று வாக்குறுதியும் அளித்திருந்தார்.

இது. கொப்பேகடுவ அளித்த அந்த வாக்குறுதியை — சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் அதன் ஜனாதிபதி வேட்பாளரால் அளிக்கப்பட்ட வாக்குறுதியை — நிறைவேற்றுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கட்டுப்பட்டதே!

தற்போதைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்த மட்டில் மாகாணசபை, நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தல்கள் மூன்றிலும் யாழ். பொதுநூலக அழிப்புடன் பின்னணியில் சம்பந்தப்பட்டு இருந்தவர்களை அம்பலப்படுத்துவதில் தீவிரம் காட்டியிருந்தார். ஆகவே யாழ். பொது நூலகத்தைச் சேரவேண்டிய நட்டஈட்டுத் தொகையை முழுமையாக வழங்க அவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் ஒரு பொது நூலகம் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டது அதுவே முதல் நிகழ்வும் அல்ல; அதுவே இறுதி நிகழ்வும் அல்ல. கோட்டை இராசதானியில் இருந்து யாழ்ப்பாண இராசதானி மீது படை நடத்திவந்த சப்புமால் குமாரயா நாயன்மார் கட்டில் அமைந்திருந்த யாழ்ப்பாண இராசதானியின் தேசிய நூல் நிலையமாகிய சரஸ்வதி நூலகத்தை தீயினால் அழித்தது பழைய வரலாறு 150 வருட கால புத்தகச் சேர்வுகளுடன் ஹாட்லி கல்லூரி நூலகம், சுவீடிஷ் அன்பளிப்பான காரைநகர் 'குளோப்' நூலகம் போன்று இன்னும் பல நூலகங்கள் அழிக்கப்பட்டமை பிற்பட்ட சம்பவங்கள்.

ஆழமான மண்ணை ஆற்றும் நடவடிக்கையாக ஜனாதிபதி சந்திரிகா வெண்தாமரை இயக்கம் மூலம் எரிந்த யாழ். நூலகத்தை திரும்பவும் கட்டி எழுப்புவதற்கு முயற்சி செய்துவருகிறார். அந்த முயற்சிஎப்போது கைகூடும் என்பது அரசியலைப் பொறுத்ததே.

அது ஒரு புறமிருக்க —

இது போன்ற அறிவாலய அழிவு வேலைகளும் அவற்றை நினைவுபடுத்தும் நடுகற்களும் எதிர்காலத்தில் தவிர்க்ககப்பட வேண்டும். அது விடயத்தில் ஜனாதிபதி கண்டிப்பாக இருப்பார் என்று எதிர்பார்ப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

1 ½ மாதம் வயதுடைய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சிநீக்கப்பட்டது. தொடர்பு No. 6, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [47519]

BME, லொறி என்ஜின் கிறாங்செட், LD வான்லொறி வில்லுத்தகடு, றிம் என்பன பாவித்ததும், புதியனவும், இரும்புக் கொள்கலன்களும் விற்பனைக்கு உள்ளன. மில்க்வைற். [சி/826]

இந்தியன் 10 H.P. டீசல் என்ஜின்கள் விற்பனைக்குண்டு. ஸ்ரீராஜ் யாழ். றெக்ஸ் வட்டு. கிழக்கு, சித்தன்கேணி (வட்டு, இந்துக்கல்லூரிக்கு அருகாமையில், உள்ள ஒழுங்கை). [47478]

### தவறிவிட்டது

திருமதி புஸ்பதேவி வைத்திலிங்கம் ஆகிய எனது 406316157 இலக்க தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய அட்டை, வங்கிப் புத்தகம் (இலக்கம் 12367) என்பன தவறிவிட்டன. எடுப்பவர்கள் சிவபுர வீதி, வல்வெட்டித்துறை என்ற விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [47518]

குணரெத்தினம் செந்தில் மயூரன் என்பவரது விசேட அடையாள அட்டை கலட்டிக்கும், இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், ''சானுகா ஜுவலர்ஸ்'' கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [47521]

### சோதிடம்

வெளிநாட்டு, உள்நாட்டு சாதகங்கள் கணிக்கவும், திருமணம், வெளிநாட்டுப் பிரயாணப் பலன்கள் அறியவும் காலை 10.00 மணிவரையும் மாலை 3.00 மணிக்கு மேலும் நாடுங்கள்: 'வரோதயன்' திருவீதி, உரும்பிராய் வடக்கு. [47541]

### புராணப் படிப்பு

கொழும்புத்துறை, ஜுன் 1 நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தினமும் மாலை 3 மணி தொடக்கம் புராணப் படிப்பு நடைபெற்று வருவதாக ஆதீன மேலாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-30)

### கணிதம், ஆங்கிலம்

O/L 97 இல் Distinction, Credit பெறுபேறுடைய ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [47495]

### காணவில்லை

N-R அடையாளமும், வெள்ளை நிறமும் கொண்ட பசுமாட்டை 24-05-97 அன்று தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள், 292/4, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத்தரவும். சன்மானம் வழங்கப்படும்.

[47511]

## NEW SCIENCE ACADEMY

நல்லூர், யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASSES

துரித மீட்டல் வகுப்புக்கள்

**ஆரம்பம்: திங்கள் 02 - 06 - 1997**

வார நாள்களில்

(காலை 8.30 முதல் பி. பகல் 12.30 வரை)

உங்கள் அனுமதியை உறுதி செய்து கொள்ளுங்கள். ஆண்டு 11 தொடக்கம் ஆண்டு 4 வரையிலான ஏனைய வகுப்புக்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

நிர்வாகி.

(47534)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 07 — 03 — 1940



விண்ணில்: 02 — 05 — 1997

### அமரர் மு. கந்தையா (சாம்)
**(சாரதி)**

மாமலை ஒன்று சரிந்தது
மாதமொன்று மறைந்தது
பாசத்தின் ஒளி விளக்கே!
நீர் சொல்லாது பேசாது பிரிந்ததேனோ?
எமை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
நீர் மீளாத்துயில் கொண்டதேனோ?

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

**மனைவி:** மகேஸ்வரி

**பிள்ளைகள்:** கலைமதி, கலைவாணி, கலைரூபி

உற்றார், உறவினர்கள்.

உரும்பிராய் வடக்கு. (47192)

உ

ஓம் சக்திதுணை

## வாழ்த்துகின்றோம்

இன்று காலை 10 மணிக்கு யாழ்/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பாராட்டி கௌரவிக்கப்படும்

### உயர்திரு செல்லையா பத்மநாதன்

அவர்கள் மேலும் சிறப்புடன் நீடுழி வாழ
ஸ்ரீ சித்தி விநாயகரை வேண்டி
வாழ்த்துகின்றோம்.

THARRMSONS
அரியாலை.

(47531)

## யூனிவேர்சல்

யாழ்ப்பாணம், கந்தர்மடம்.

## O/L DAY CLASSES

துரித மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்: **திங்கள் 02 - 06 - 1997**

வாரநாள்களில்

(காலை 8 30- பிற்பகல் 12.30)

உங்கள் அனுமதியை உறுதி செய்து கொள்ளுங்கள். ஆண்டு 11 தொடக்கம் ஆண்டு 4 வரையிலான ஏனைய வகுப்புக்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

- நிர்வாகி.

(47533)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 03. 03. 1907 விண்ணில்: 19. 04 1997

### திருமதி நாயகம் செல்லத்துரை

எங்கள் அன்பின் கண்கண்டதெய்வமாகிய தலைவி 19. 04. 97இல் மல்லாவியில் பரமனடி சேர்ந்தார் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 03 - 06 -97இல் ஏழாலையில்உள்ள திருமதி பாக்கியம் இராசையா என்பவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (47501)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இசைக்கலைமணி, சங்கீத கலா வித்தகி

### செல்வி ஞானாம்பிகை சின்னத்தம்பி

(இசையாசிரியர், யா/ இயற்றாலை அ. மி. த. க பாடசாலை, யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாசாலை.)

நான்காண்டு வந்தென்ன நூற்றாண்டென்ன
'ஞானாம்பிகை' உந்தன் நினைவு வந்தெம்
ஊன் ஒழிந்து போகும்வரை உருக்கும் அம்மா!
ஒழியாத துன்பமதைப் பெருக்கும் அம்மா!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

கரம்பைக்குறிச்சி,
வரணி. (சி/834)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
# கேள்வி அறிவித்தல்

01 - 07 - 1997 தொடக்கம் 31-12-1997 வரையிலான காலப் பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகை அறவிடும் விடயங்களுக்கு கேள்விகள் இரு பிரதிகளில் 11 - 06 - 1997 ஆம் திகதி காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப் படும். அதேதினம் நண்பகல் 12-00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

| கேள்வி விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை | 10,000/- | 500/- | 100/- |
| 2. மீன் சந்தை வல்வெட்டித்துறை | 10,000/- | 500/- | 100/- |
| 3. மாட்டிறைச்சிக் கடை வல்வெட்டித்துறை | 15,000/- | 500/- | 100/- |

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவக்கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 10 - 06 - 1997 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப் படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. மேற்படி கட்டணங்கள் இவ் வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பெ. கனகசபாபதி
செயலாளர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
26 - 05 - 1997 (சி-823)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட

# உயர்திரு செல்லையா பத்மநாதன்

01 - 06 - 19

## ...ரியாலை சித்தி விநாயகர் ஆலய ...தம குருவின் அருளாசிச் செய்தி

அன்பு, பண்பு, அடக்கம் என்ற நற்குணங்கள் ...ந்தப்பெற்ற யாழ் அரசாங்க அதிபர் செ. பத்ம ..., எத்தகைய பிரச்சினைகளுக்கும் முகங் கொடுக்க ...டியதாய் இருந்தபோதிலும், அதிகம் அலட்டிக் கொள் ...இன்முகத்தோடு அலுவல்களை நடத்துவதில் வல்லு...

...மது பிரதேசத்தின் போர்க்காலச் சூழலிலும் பல ...ரின் மத்தியிலும் கடமையே கண்ணாக நடத்திய ...வர்.

...வருடைய முகவசீகரமும், பேச்சும் எவரையும் ... செய்யும். அரியாலையில் பிறந்து, வளர்ந்து, ... இன்று அரசாங்க அதிபராக இருப்பது இந்த ஊர் ... பெரும்பேறாகும்.

... அரசாங்க அதிபரும், அவருடைய குடும்பத்தாரும் ... ஆயுளுடனும், நோய்,நொடியின்றி சீரும், சிறப்புட... வாழ எல்லாம் வல்ல சித்தி விநாயகர் அருள் வேண்டி ...ங் கனிந்த நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் ...வித்துக் கொள்ளுகின்றேன்.

பிரதிஷ்டா வித்வ ஜோதி,
கிரியா ரெத்தினம்,
**இ. சுப்பிரமணியக் குருக்கள்,**
சித்திவிநாயகர் தேவஸ்தானப் பிரதம குரு.

## ...துயர் துடைப்பதில் முன்னிற்பவர்

**யாழ்.** அரசாங்க அதிபர் உயர்திரு. செ. பத்ம...தன் அவர்களைக் கௌரவிக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்...க் குழுவினரை முதலில் நான் வாழ்த்துகின்றேன். இன்...றைய இக்கட்டான சூழ்நிலையில் இந்த மண்ணில் தங்கியி...ந்து நற்பணியாற்றுகின்ற பெருமக்களைக் கட்டாயமாக ...ாமனைவரும் கௌரவிக்க வேண்டிய கடமைக்கு உரிய...ர்களே.

அச்சமும், அவலமும் நிறைந்த இம்மண்ணிலே மக்க...ின் துயர் துடைக்கும் பணிகளில் முன்னின்று தலைமை ...கிப்பவர் எமது அரச அதிபரே என்றால் அதில் மிகை...யான்றுமில்லை. எனவே துன்பம் தொலையவும் இன்பம் ...லைக்கவும் அமைதி பெருகவும் தமிழினம் தலை நிமிர்ந்து ...ாழவும் வேண்டி நற்பணியாற்றிவரும் அரச அதிபர் உயர்...ரு. செ. பத்மநாதன் அவர்களை எல்லாம் வல்ல தெல்...ப்பழையூர் துர்க்காதேவி இன்னருள் புரிந்து இனிது காப்...ற்றுவாராக என்று பிரார்த்திக்கின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ச. நீ.**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## யாழ்ப்பாண மக்களுக்கு இவரது சேவை தேவை

**யாழ்.**மாவட்ட அரசாங்க அதிபர் திரு.செல்லையா ...த்மநாதன் அவர்களைக் கௌரவிக்கும் இத்தினத்தில் ...வரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் பதவி இலங்கையின் ...னைய அரசாங்க அதிபர் பதவிகளை ஒத்ததாக இருப்...னும் அதை வகிப்பவருக்கு பெருமையுண்டு. இம்மாவட்...தத்தை நிர்வகிப்பவர் சிறந்த நிர்வாக ஆற்றலும், நெருக்...டி நிர்வாகத் திறமையும், புனர் நிர்மாணத் தேவைகளை ...மற்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய ...ண்புகளைக் கொண்டவரே இன்றைய அரசாங்க அதிபர் ...ரு. செ. பத்மநாதன் அவர்களாவார்.

திரு. பத்மநாதன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்...ழக பொருளியல் சிறப்புப் பட்டதாரியாகவும், இஸ்ரேல் ...ாட்டில் குடியிருப்பு சம்பந்தமான கல்வியை மேற்கொண்டவ...ாகவும், இயற்கை அனர்த்தனங்களுக்கு முன்னேற்பாடாக ...த்தகைய நிர்வாகம் செய்யலாமென்பதிலும் பயிற்சியுடை...வர். இத்தகைய கல்வி அறிவும், நிர்வாகத் திறமையும் ...கொண்ட இவர் எமது மாவட்டத்திற்கு அரசாங்க அதிப...ாகக் கிடைத்தமை போற்றுதற்குரியதாகும்.

மேலும் இவர் அரசாங்க எழுது வினைஞராகத் ...தனது சேவையை ஆரம்பித்து, இன்று யாழ். மாவட்ட ...அரசாங்க அதிபராக விளங்குகின்றார். இதற்கு முன்னர் ...வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகவும், யாழ். மாவட்...டத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்...ளார். இவர் வயதில் இளமையானவர், சுறுசுறுப்பானவர், ...விவேகமுள்ளவர்.

இவரது சேவை யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த அர...சாங்க அதிபர்களான டைக், நடேவன் போன்றவர்கள் ...வரிசையில் இடம் பெறவேண்டும். சொல்லொணாத் துயருக்...குட்பட்டிருக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு இவர் இதுவரை ...கொடுத்த ஆக்கமும், ஊக்கமும் தொடரவேண்டும் எனவும், ...புனர்வாழ்வு, புனர்நிர்மாண அபிவிருத்திப்பணிகளில் ஈடு...படவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.



அரியாலை என்னும் அறிவூரில் தோன்றிப்
புரிதொண்டால் யாவருமே போற்றப்— பெரியவராய்
ஆன பத்மநாதன் அரச அதிபர் சீர்பேச
ஆனைமுகனே அருள்.

**- சொக்கன்**

## சுயவிவரம்

| | | |
|---|---|---|
| பெயர் | :- | செல்லையா பத்மநாதன் |
| தகப்பன் பெயர் | :- | தில்லையம்பலம் செல்லையா |
| தாயார் பெயர் | :- | செல்லையா பொன்னம்மா |
| பிறந்த திகதி | :- | 25-12-1945 (கிறிஸ்மஸ் நாள் |
| ஆரம்பக் கல்வி | :- | யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை (4ஆம் வகுப்பு வரை) |
| உயர் கல்வி | :- | பரி.யோவான் கல்லூரி யாழ். (5 ஆம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழக அனுமதி வரை — 1967) |
| உயர் கல்வி | :- | இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை பொருளியல் சிறப்புப் பட்டதாரி |
| புலமைப் பரிசில் | :- | பட்டயக் கணக்காளர் (இலங்கை — 1975) |
| முதுமாணிப் பட்டம் | :- | பிராந்திய திட்டமிடல் - இஸ்ரேலியம் (1989 — 90) உயர் கல்வி நிறுவனம் பயிற்சி - இஸ்ரேல், பிலிப்பைன்ஸ் - இடர்கால அபிவிருத்தி நடவடிக்கை - ''டிப்ளோமா'' ஆசிய அபிவிருத்தி நிறுவனம் பாங்கொக் — தாய்லாந்து 1995. |
| பதவிகள் | :- | 1967 - 74 பொது எழுது வினைஞர் / 74 — 75 அரச கணக்காளர் ] விவசாயத் திணைக் களம் பேராதனை |
| | | 75—76 பட்டயக்கணக்காளர் நிறுவனம் — கொழும்பு |
| | | 1976 — 80 மாவட்ட காணி அதிகாரி - மன்னார் |
| | | 80 — 82 மாவட்ட காணி அதிகாரி - களுத்துறை |
| | | 83 — 84 மாவட்ட காணி அதிகாரி - யாழ்ப்பாணம் |
| | | 84 — 87 மாவட்ட காணி அதிகாரி - கிளிநொச்சி |
| | | 87 — 89 மேலதிக அரசாங்க அதிபர்- வவுனியா |
| | | 89 — 90 அரசாங்க அதிபர் - வவுனியா |
| | | 90 — 95 திட்டப்பணிப்பாளர் - யாழ்ப்பாணம் |
| | | 95 - இன்றுவரை - அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம் |

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

**யாழ்ப்பாணம்** அரச அதிபர் திரு. செ. பத்மந... அவர்களின் சேவை நலம் பாராட்டும் விழா செய்தி அ... மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாண அரசாங்க ...ராசப் பதவி ஏற்ற காலந் தொடக்கம் இன்று வரை ... கொண்ட கடமையை ஒழுங்குபட நெறிப்படுத்திய... உயர் நிலை மனிதராக அவர் கருதப்படுகின்றார், கட... கண்ணியம், கட்டுப்பாடு என்னும் நெறிகளைத் தனக்கு ... கலன்களாகக் கொண்டு இந்தக் கஷ்டமான சூழ் நிலைய... மக்களுடைய தேவைகளை உணர்ந்து, கடமையின் ... லாக மக்களை மன நிறைவோடு வாழச் செய்து ... டிருக்கின்றார்.

இந்தப் பாராட்டு விழாவை எடுக்... அரிய... வாழ் மக்களை வாழ்த்துகின்றேன். செ. பத்மநாத... கள் மண்ணில் நீண்ட ஆயுளோடு வாழ இறைவ... பிரார்த்திக்கின்றேன்.

இறைவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக!

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய ஸ்வாமிக...**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன...

## சேவை மேலும் சீரியதாகட்டு...

**மிகவும்** இடர் மிகுந்த காலப் பகுதியில் ... மாவட்ட நிர்வாகப் பொறுப்பைக் கையேற்று, அ... கழிக்கப்பட்ட மக்களின் துயர் துடைத்து, பொறுப்பு... பெரும் செயற்றிறமையுடனும், நற்பணிபுரிந்து ... உயர்திரு. செ. பத்மநாதன் அவர்களின் சேவை புகழ... வேண்டியதொன்றாகும். இவ்வேளையில் ''எங்கள் ...ணின் மைந்தன்'' என்ற பெருமை பாராட்டி அ... பிரதேச மக்கள் விழா எடுக்கிறார்கள். இது அவர்... குரிய உரிமையும், கடமையுமே! இத்தருணத்தில் அவ... டன் சேர்ந்து அரச அதிபரைப் பாராட்டுவ... தொடர்ந்து அவர் பணி பிரதேசம் கடந்து சீரிய... செம்மையுள்ளதாய், வரட்சியுள்ள மண்ணில் வளம் ... கும் வகையில் எல்லா மக்களுக்கும் கி..டக்க வி... எல்லாம் வல்ல இறைவனை இரந்து ...மனமார வா... கின்றேன்.

**அருட்தந்தை ஜே. பி. ஈ. செல்வராசா,**
யாழ். மறை மாவட்ட பரிபாலகர்.
(ஆயர் சார்பில்)

## அவருக்குப் பின்புலமாக நிற்பே...

**அரியாலை** தந்த மைந்தன் செல்லையா பத்மந... தான் பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். ... அறிந்தவரை அரியாலை ஊரைச் சேர்ந்தவர்களில் ... அரச அதிபராக வந்துள்ளவர் இவரேயாவார்.

பட்டதாரியான இவர் தமது அரச சேவையை ...ரண எழுது வினைஞராகத் தொடங்கி சிறிதுகாலம் ... காளராய் வேலை பார்த்து, இலங்கை நிர்வாக சே... குத் தெரிவாகி, மன்னார் மாவட்ட காணியதிகா... எழுபதுகளின் பிற்பகுதியில் எனக்கு அறிமுகமா... அந்த நட்பு இன்னமும் தொடர்கிறது.

யாழ். அரச அதிபராவதற்கு முன்னர் வவு... அரச அதிபராகவும் இருந்து சாதனை புரிந்த ஒரு ...னையாளர். கடந்த தொண்ணூறாம் ஆண்டில் இ... குடாநாட்டில் கடமைபுரிந்து யாழ். மக்களுக்கு அளப்... சேவையாற்றும் இவர், மற்றைய நிர்வாக சேவை... காரிகளில் இருந்தும் வேறுபட்டவர். யாழ். மக்கள் த... போர்ச் சூழ்நிலையில் அல்லற்படும் போது, மாவட்ட... விட்டு மற்றவர்கள் போன்று ஓடிவிடாது, நிலை... சேவையாற்றுவதுடன், எந்தப் பிரச்சினைக்கும் உட... டன் முடிவெடுத்து, காலம் தாழ்த்தாது சேவை செய்...

இவர் பரந்த கண்ணோட்டமும் சிறந்த சிந்தனை... கொண்டு, பிற்கால யாழ். இளம் சந்ததியினரின் நல... வுக்கான தளம் ஒன்றினை அமைப்பதற்காக, தமது ... தினை முழுவதுமாக அர்ப்பணித்து சேவையாற்ற ... டும் என்னும் குறிக்கோளுடன் கடமையாற்றுவத... பார்க்கும் போது அவரைப் பாராட்டாமல் இருக்க... யாது.

கிறிஸ்மஸ் தினத்தில் இவ்வுலகிற்கு வந்த செ. ... நாதன், என்றென்றும் மக்களுக்காகச் சேவையாற்ற, ... ருடன் சேர்ந்து இணைந்து சேவையாற்றும் யாழ். ... நல்லிதயங்களுமாக அவரின் சேவைக்கு பின்புலமாக ... அவரது காலத்தில் யாழ். மக்களின் எதிர்காலம் ... மாக மலர்வதற்கு எமது பங்களிப்பை அவருக்கு நல்... டன் அவரின் நல்வாழ்வுக்கு எமது நல்லாசிகளையும் ... அரியாலையூர் தந்த மண்ணின் மைந்தன் மேலும் ... பதவியுயர்வு பெற்று நாட்டுக்காக, இனத்துக்காகச் ... யாற்ற அவரை வாழ்த்துகின்றோம்.

**க. ...முகநாதன்**
மேலதிக அரச அதிப...
யாழ். செயலகம்.

01-06-97 இல் நடைபெறும் யாழ். மாவட்ட அரச அதிபர் திரு.செல்லையா பத்மநாதனை செ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ட அரசாங்க அதிபர்
# ...ன் அவர்களின் மாட்சிநயப்பு மலர்

-1997

## OUTSTANDING PERSONALITY

It gives me great pleasure in forwarding this message of felicitation to Mr C. Pathmanathan, a classmate at school and contemporary of mine at the University in attaining the position of the first citizen of Jaffna.

Throughout its 174 years of history, St. John's has produced many an outstanding personality in almost all walks of life and Mr. Pathmanathan is one of them.

Although he hails from a place which is also famous for producing outstanding sportsmen, his achievements have been in the academic field that earned him such a prestigious position.

My heartiest congratulations to him and best wishes to carry on his task.

**S. Thanapalan,**
**Principal,**
**ST. John's College,**
**Jaffna.**

## நிர்வாகத் துணிச்சல் மிக்கவர்

யாழ். அரசாங்க அதிபர் திரு. செல்லையா பத்மநாதன் அவர்கலைக் கௌரவிக்கின்ற இச் சந்தர்ப்பத்தில் ஆசியுரை வழங்க வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். திரு. பத்மநாதன் அவர்கள் சவால்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் அப் பாரிய பொறுப்பினைத் துணிச்சலுடன் ஏற்றுக் கொண்டார். அப் பணியை அவர் ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலே அப்பதவிக்கு மிகவும் பொருத்தமான ஒருவர் நியமிக்கப்பட்டார் என மகிழ்ச்சியும், நம்பிக்கையும் கொண்டோம். எம் நம்பிக்கை வீண் போகவில்லை.

திரு. பத்மநாதன் தமது சிறந்த செயல்திறனினாலும், துணிச்சலினாலும் காலத்திற்குப் பொருத்தமாக செயற்பட்டு குறிப்பாகப் பாதிக்கப்பட்டிருந்த எம் மக்கள் தம் வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கு ஆக்கபூர்வமாகச் செயற்பட்டார். பின்தங்கிய, பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களில் கூடிய அக்கறையும், எடுத்த பணியைச் சிறப்பாக நிறைவேற்றுகின்ற ஆளுமையும் இவருக்குரிய தனிச் சிறப்புகளாகும். மக்களின் ஆசீர்வாதத்துடன் இவர் சேவை மேலோங்க வாழ்த்துகின்றேன்.

**வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## உழைப்பால் உயர்ந்த மாமனிதர்

''கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை'', ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்பவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு, உழைப்பால் உயர்ந்த மாமனிதர் எமது மாவட்ட அரச அதிபரும், மாவட்ட ஆணையாளருமாகிய திருமிகு செ. பத்மநாதன் ஐயா அவர்கள், கடந்த பல ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் தமிழ் மக்கள் அனுபவித்து வந்த சொல்லொணாத் துயரங்களோடு சம்பந்தப்பட்ட நெருக்கடி முகாமைத்துவ தந்திரோபாயத்திலிருந்து விடுபட்டு சிறிது சிறிதாக அபிவிருத்தி நிர்வாகத்திற்கு இம் மாவட்டத்தின் சகல நிர்வாகிகளையும், துறைசார் நிபுணர்களையும் வழி நடத்திச் செல்லுகின்ற தலைவராக இவர் திகழ்கின்றார்.

இன்று வளர்ந்து வரும் நவீன முகாமைத்துவ உலகில் உற்பத்தித்திறன், ஆளணி அபிவிருத்தி, சேவை மனப்பான்மை, மக்கள் பங்களிப்பு, மக்சள் பொறுப்புத்தன்மை போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் மாவட்டத்தில் பல பயிற்சி நெறிகளை நடத்தி மிகவும் திறமையான ஆளணியை உருவாக்குவதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றி வருகின்றார்.

மீளக்குடியமர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கையை முன்னைய நிலைக்கு படிப்படியாக உயர்த்தும் நோக்குடன் குடியிருப்புகளுக்கு அத்தியாவசியமான அடிப்படைவசதிகளை உருவாக்கிக் கொடுத்தல், விவசாய நடவடிக்கைகளை மீளமைத்து உற்பத்தித்திறனை பெருக்குதல், சீரான உணவு விநியோகம், கல்வி, சுகாதாரம், சமூக சமயப்பணிகளை மீள இயக்குதல் போன்ற பணிகளில் பல சொல்லொணா இடர்ப் பாடுகளின் மத்தியிலும் முழுமூச்சுடன் செயற்பட்டு, யாழ். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திச் செல்லுவதில் தமது முழு நேரத்தையும் அர்ப்பணிப்பவர்.

அவர்களுக்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் சகல நலன்கலளயும் நல்கிட மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

**பு. சுந்தரம்பிள்ளை,**
பிரதேச செயலர், தென்மராட்சி.

**மலர் அமைப்பு**
**த. பஞ்சலிங்கம்**
(பத்திரிகைக் குழு செயலாளர்)



## முத்திரை பதித்த உத்தமர்

''மக்கள் சேவை மகேசன் சேவை'' என்று சொல்வதற்கான பெருமைக்குரியவர் திரு. பத்மநாதன், மக்களின் இயல்பு வாழ்க்கையில் சொல்லொணாத் துன்பமும், துயரும் கொண்ட இக் காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்திருக்கும் அவரது சேவை உண்மையிலேயே 'மகேசன்' சேவைதான்.

அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றை அதிசிறப்பாகக் கொண்டு விளங்கும் அரசாங்க அதிபர் அவர்கள் எமது ஊருக்குக் கிறிஸ்மஸ் தினத்தில் கிடைத்த அரிய முத்தாவார். இந்த முத்து தனது அளப்பரிய சேவையினால் யாழ். மாவட்டத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

உணவு விநியோகத்தில் இடர், தடை வராமல் செயற்பட்டமை உரிய நேரத்தில் பல்வேறு இடங்களில் வர்த்தகத் திணைக்களத்தைச் செயற்பட வைத்தமை, மீளக் குடியேறியபின் தொழில், குடியிருப்பு போன்றன தீர்த்து வைக்கப்பட்டமை, சீர்குலைந்திருந்த நிர்வாகத்தைக் கட்டி எழுப்பியமை என்பன இவரின் முத்திரை பதித்த சேவைக்கு உதாரணங்களாகும்.

இவரின் பணி தொடர எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமான் அருள் பாலிப்பாராக.

**சு. பாலசுந்தரம்**
(ஓய்வு பெற்ற தபாலதிபரும் சமூக சேவையாளரும், தலைவர் அமைப்புக் குழு)

## நினைத்ததை நிலைநாட்டும் சாதனையாளர்

எனது இனிய நண்பன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் அவர்களின் சீரிய சேவைக்காக ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். சிறந்த கல்விமானாகிய திரு. செ. பத்மநாதன் அவர்கள் விளையாட்டு, கலைத்துறைகளில் ஆர்வம் கொண்டவரும், சிறந்த விவசாயப் பிரியருமாவார்.

தனது சேவைக் காலத்தில் பல பொருத்தமான பதவிகளை வகித்த இவர், இன்றைய காலகட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கு மிகவும் பொருத்தமான அரசாங்க அதிபராவார். பொதுவாக மிகவும் கடினமான விடயங்களையும் எளிதாக்கி செயற்படுத்தக் கூடியதன்மை இவரிடம் நிறைந்து இருக்கின்றது. அத்துடன் நினைத்ததைச் சாதிக்கக் கூடிய வல்லவருமாவார். இவரின் நற்பணி மேலும் சிறக்கவும், நல்லாரோக்கியத்துடன் இவர் வாழவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**கலாநிதி சு. மோகனதாஸ்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

## செயல் திறன் மிக்கவர்

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் அவர்களைக் கௌரவிப்பதற்கான வைபவம் ஒன்று நடைபெற இருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. செ. பத்மநாதன் அவர்கள் யாழ். செயல் திட்ட பணிப்பாளராகப் பணியாற்றிய காலத்திலிருந்து, அன்னார் சிறந்த பணியாற்றி வருகிறார். செயல்திட்டப் பணிப்பாளராகச் சிறந்த பணியாற்றியதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர்.

வலிகாமம் வடக்கு மக்கள் இடப்பெயர்வினால் ஏற்பட்ட இன்னல்களுக் கெல்லாம் இனிய பணியாற்றி உதவியவர். தற்பொழுது வலிகாமம் வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு பல்வேறு வழிமுறைகளில் பாடுபட்டு வருபவர்.

மக்கள் நலன் பெற, நாடு நலன் பெற அவர்தம் பணி சிறக்க, மனமார, உளமார வாழ்த்துகின்றேன்.

**சி. சிவமகாராசா**
(தலைவர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்)

## மக்கள் நலன் நாடும் செயல் வீரர்

யாழ். மாவட்டத்தின் ஏழரை ($7\frac{1}{2}$) இலட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்ட போது, அம்மக்களின் உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் போர்க்காலச் சூழ்நிலையிலும் அரசாங்கத்துடன் வாதாடி கப்பல், கப்பலாகத் தருவித்து இவ்விடம் வசதியான இறங்குதுறை இல்லாதிருந்தபோதிலும், தருவித்த பொருள்களை அதிவிரைவில் எமது சங்கத்துடன் இணைந்து இறக்குவித்த செயல் வீரர் அரச அதிபர் உயர்திரு. செ. பத்மநாதன் அவர்களாவார்.

அவர்களைப் பாராட்டுவதில் பேருவகை அடைவதுடன் இவரது வியத்தகு அதிவிவேக புத்திக் கூர்மையான செயற்பாட்டை இனி எவருமே ஈடுசெய்யவோ, அலங்கரிக்கவோ முடியாதென என்னால் பெருமையுடன் துணிந்து கூறலாம். இவரின் சேவை மென்மேலும் சிறக்க சந்நிதி முருகன் அருள் புரிவாராக.

**சி. கணபதிப்பிள்ளை,**
தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்.

## அளப்பெருஞ் சேவையைப் போற்றுவோம்!

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வரலாறு காணாத மனித இடப்பெயர்வோடு தோன்றிய அவல நிலையில் துணிந்து அரசாங்க அதிபராகப் பதவியேற்று, மக்களின் பேரணியில் ஒருவராக இருந்து பல்வேறு வகையான இன்னல்களுக்குட்பட்டு, அல்லலுற்ற யாழ். மாவட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற பெருமதிப்புக்குரிய உயர்திரு செ. பத்மநாதன் அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்ற மக்களின் எண்ணங்களை பிரதிபலிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

இடம்பெயர்ந்த வேளை ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதில் அல்லலுற்ற முதியவர்களின் பலதரப்பட்ட இன்னல்களை அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே சீராக்கி, நல்ல நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியமை இவரின் போற்றத்தக்க பணியம்சமாகும். இவர் யாழ். மாவட்ட மக்களின் அத்தியாவசியப் பொருள்களை காலத்திற்குக் காலம் பெற்றுக் கொள்வதற்கு தன்னாலியன்ற அனைத்தையும் செய்து மக்களின் நம்பிக்கையைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்மஸ் தினத்தன்று பிறந்த பத்மநாதன் மனிதநேயம் மிக்கவர். நன்கு தெளிந்த ஆழமான சிந்தனையும் இரக்க சிந்தனையும் பெற்ற பெருமகன். சமூகத்தில் பலவகையிலும் பின் தங்கிய மக்களின் பால் இயல்பாகவே அனுதாபம் கொண்டவர்.

பட்டயக் கணக்காளரான இவர் தனது செயல் திறமை முன்நோக்கு, திட்டமிடல் ஆகியவற்றின் துணையுடன் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்த ஒரு வருட காலத்தினுள் பசி, பட்டினி, வீடின்மை, தொழிலின்மை என்பவற்றை அகற்ற பெரும் தொண்டாற்றி வருகின்றார் அவரது சேவையைப் பாராட்டுவது எமது கடமையும், அவரது செயற்பாட்டிற்கு வழங்கும் ஊக்கமும் ஆகும்.

தீர்மானம் எடுக்கும் பண்பு, துணிவு, திறமை, கடின உழைப்பு ஆகிய பண்புகளைக் கொண்ட திரு. பத்மநாதன் தூண்கள் மேல் கட்டி எழுப்பப்பட்ட வனப்பு மிக்க கம்பீரமான கோபுரம் போன்றவர்.

அவர்களின் அளப்பரிய சேவையினைப் போற்றி வரவேற்று வாழ்த்துகின்றோம்.

**அ. உபயசேகரம்**
செயலாளர், அமைப்புக்குழு

...ன கௌரவிக்கும் விழாவில் அமைப்புக் குழுவினரால் இந்த நயப்புமலர் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் அக்கடமி

பலாலி வீதி, உரும்பிராய்.

**O/L பகல் நேர வகுப்புக்கள்**

(புதிய பிரிவு)

ஆரம்பம்: 02-06-97 திங்கள் கிழமை
காலை 8-00 மணி

ஆண்டு 5 புலமைப்பரிசில் வகுப்புக்களும்
பயிற்சிப் பரீட்சைகளுடன் நடைபெறுகின்றன.

(47480) - நிர்வாகி


வலிகாமம் மேற்கு

# பிரதேச சபை சுழிபுரம்

வீடமைப்பு நகரச்சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின்
அத்தியாயம் 268 இன் பிரகாரமும்

1978ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி
அதிகார சபை சட்ட இல. 41 இன் கீழும்

## அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் அனுமதியின்றிக் கட்டடங்கள் அமைத்தலும், புதுப்பித்தலும். திருத்தம் செய்தலும், வீதியோர எல்லைச் சுவர் அல்லது கட்டடம் கட்டுதலும் போன்றவை மேற்படி சட்டங்களின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இவைகளுக்கான அனுமதியை இப்பிரதேச சபை உப அலுவலகங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்து எனது அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலதிக விவரங்கள் இத் தலைமையலுவலகத்திலும், சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை. அராலி உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

கா, சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் மேற்கு
பிரதேச சபைத் தலைமையலுவலகம்,
சுழிபுரம்.
1997-05 27 (சி/825)


# BITSMANS
கலவி நிறுவனம்

மானிப்பாய்.

**O/L DAY CLASS**

எமது வழமையான SUPER GRADE
ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகிறது

| | |
|---|---|
| கணிதம்<br>இரா. அருட்செல்வம் | விஞ்ஞானம்<br>தேவா |
| ஆங்கிலம்<br>தெய்வதவபாலன் | தமிழ், சமயம்<br>என். பாலா, தர்மா |
| வரலாறும், சமூகக்கல்வியும்<br>கணேஸ், என். ராஜன் | வர்த்தகம்<br>என். ராஜன் |

ஆரம்பம்: 2-6-97 திங்கள் காலை 8.00

**A/L 99-98** கலை, வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

(47255)


## ஞானப்பிரகாசர் நினைவுப் போட்டி

பன்மொழிப்புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் 50 ஆவது மறைவு ஆண்டை ஒட்டி நெடுந்திவு மறைக் கல்வி நிலையத்தின் சார்பில் பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நெடுந்தீவு றோ. க. பெண்கள் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.

போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்கள் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ரீதியில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டிகளில் கலந்து கொள்வர்.

எதிர்வரும்6 ஆம்7ஆம்திகதிகளில் மறைமாவட்ட இறுதிப் போட்டிகள் நடைபெறும். (ஐ 111)

## புளொட் உறுப்பினர் தப்பினார்

மட்டக்களப்பு மாநகரசபையின் புளொட் அமைப்பின் உறுப்பினர் ஸ்ரீஸ்கந்தராஜா கொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் தப்பி உள்ளார்,

நேற்றுக்காலை 6-45 மணி அளவில் அவர் வாவியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சமயம் வள்ளத்தில் வந்த விடுதலைப் புலிகள் அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் —

அவர் வாவியில் பாய்ந்து கரை சேர்ந்துவிட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது (இ-21-3)

## தமிழ்த்தின விழா

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு செல்வி ரா. சோமசுந்தரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாணம்- நல்லூர் பிரதிக்கல்விப்பணிப்பாளர் வ. தானையா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-30)

## கோழிகள் கூட்டுடன் திருட்டு

தென்மராட்சி, ஜூன் 1

கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் கோழித்திருட்டு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு வேளையில் உலாவும் திருடர்கள் பல வீடுகளில் கூட்டுடன் கோழிகளைத் திருடிச் செல்வதாகவும் ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளதால் இத் திருடர்களைப் பிடிக்க முடியாமல் உள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-117)

# 2 லட்சத்து 66 ஆயிரம் விசேட அ. அட்டைகள்

## இதுவரை வழங்கப்பட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். செயலகத்தில்இயங்கும் விசேட அடையாள அட்டைப் பிரிவு இதுவரை 2 இலட்சத்து 66 ஆயிரத்து 201 விசேட அடையாள அட்டைகளை விநியோகித்திருப்பதாக அப் பிரிவின் கருத்திட்ட முகாமையாளர் ரி. திருலிங்கநாதன் தெரிவித்தார்.

2 இலட்சத்து 4 ஆயிரத்து 203 விசேட அடையாள அட்டைகள் பிரதேச செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஊடாகவும்—

30 ஆயிரத்து 637 விசேட அடையாள அட்டைகள் பாடசாலை அதிபர்கள் ஊடாகவும் — வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். இதைவிட ஆயிரத்து 361 விசேட அடையாள அட்டைகள் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதே வேளை — விசேட அடையாள அட்டைகள் வழங்கும் செயற்றிட்டமானது இம்மாதத்துடன் பூர்த்தி அடைந்துவிடும் என்றும்—

தற்போது தினமும் ஆயிரம் விண்ணப்பங்கள் வரை தமது பிரிவுக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

# தபாற் சேவை சீரின்மையால் காலாவதியான காசோலைகள்

## உள்ளூராட்சி ஓய்வூதியர் பாதிப்பு

தென்மராட்சி, ஜூன் 1

குடாநாட்டிற்கான தபாற் சேவை சீரின்மையால் உள்ளூராட்சி ஓய்வூதியத்திற்கான காசோலைகள்காலாவதியான திகதிக்குப் பின்னர் கடந்த வாரம் பளை கிராமிய வங்கிக்குக் கிடைத்துள்ளன.

இக் காசோலைகளுக்குரிய வவுச்சர்களும் கடந்தவாரமே ஓய்வூதியர்களுக்கு கிடைத்தன. ஜனவரி மாதத்திற்குரிய வவுச்சர்களோ, காசோலைகளோ இன்னமும் வந்து சேரவில்லை.

பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்குரிய காசோலைகள் ஏற்கனவே வந்து சேர்ந்த போதிலும் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய காசோலைகள் காலாவதி திகதியை தாண்டி விட்டதால் ஓய்வூதியம் பெற முடியாது உள்ளதாக ஓய்வூதியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை-உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான மே மாதத்திற்குரிய காசோலைகளும், பட்டியல்களும் கடந்த வியாழக்கிழமை வங்கிகளுக்கு கிடைத்துள்ளதாக தெரியவருகிறது. (ஐ-117)

# யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஓய்வூதியம் இம்முறை நிலுவையுடன்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்குஇம்மாத ஓய்வூதியத்துடன் 5 வீத ஓய்வூதிய அதிகரிப்பு நிலுவையையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து 5 வீத ஓய்வூதிய அதிகரிப்பு வழங்குவதாக தெரிவிக்கப்பட்ட போதும் கடந்த 5 மாதங்களாக இவ் வதிகரிப்பு ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படவில்லை.

இதே வேளை - கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வூதியம் பெற விண்ணப்பித்தவர்கள் ஓய்வூதியம் பெறுவது தொடர்பாக யாழ். பிரதேச செயலகத்திற்கு அடிக்கடி வந்து விசாரித்துச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கான நிதி கிடைக்கப் பெறாததாலேயே இந்த நிலைமை நீடிப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. (ஐ-5)

உ
சிவமயம்
ஓம் குருப்பிரம்மனே நம

# உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருஷம் வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் (02-06-1997)
திங்கட் கிழமை காலை 9-05 முதல் 10.50 மணி வரையுள்ள
அச்சுவினி நட்சத்திரமும் சித்தயோகமும் கர்க்கடக லக்கினமும் கூடிய
சுபமுகூர்த்த வேளையில்
சிவாச்சாரியர்கள், திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீநீலாயதாட்சி சமேத
காயாரோகண சுவாமி தேவஸ்தானம்
அ ஆனந்தநடேசர் குருக்களினதும், சதாசிவக்குருக்களினதும் பேரனும்
எங்கள் ஏக புத்திரனுமாகிய

## சிரஞ்சீவி ஆனந்தகிருஷ்ண சர்மா அவர்களுக்கு

உபநயன பிரம்மோபதேச பிரம்மசர்ய விரத அநுட்டானம் எம்பெருமான்
திருவருளை முன்னிட்டு நடைபெற இருப்பதால் அத்தருணம் யாவரும்
தம்பதி சமேதரராக வந்து புத்திரனை ஆசீர்வதிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

ச. சிவகுமாரக் குருக்கள்
சி. நீலாயதாட்சி அம்மா தம்பதிகள்

'செல்வபதி',
நல்லூர். (47505)

## FOURTH YEAR REMEMBRANCE



In everloving memory of
**Primrose Pathmadevi Sabapathypillai**
**(Ranee)**

Called to rest: Ist June 1993

Deep in our hearts
You will always stay
Loved and remembered everyday

Fondly remembered by
**Her Loved Ones**

"Primrose Cot"
Chavakachcheri. (C/822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்


உ

நீர்வேலி

அருள்மிகு செல்லக் கதிர்காமசுவாமி தேவஸ்தானம்

"சுப்ரஹ்மண்யம்"

(தியான,ஸ்தோத்திர கதம்பம்)

நூல் வெளியீட்டு விழா

ஷ விழா 2-6-97 திங்கட்கிழமை காலை 10-30 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர்:- கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்து நாகரிகத்துறை
(யாழ். பல்கலைக் கழகம்)

வரவேற்புரை:- சிவசிறி-சாம்பசிவ சோமதேவக் குருக்கள் அவர்கள் (நீர்வேலி)

நூல் வெளியீடு:- சிவஸ்ரீ சுவாமிநாத இராசேந்திரக் குருக்கள் அவர்கள் (நீர்வேலி)

வெளியீட்டுரை:- பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்கள்

முதற் பிரதி பெறுநர்:- சிவஸ்ரீ கா. சாம்பசதாசிவக் குருக்கள்
ஸ்ரீ அரசகேசரி விநாயகர் தேவஸ்தானம் (நீர்வேலி)

சிறப்புரை:- பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா (யாழ்ப்பாணம்)

சிறப்புப் பிரதி பெறுபவர்கள்:-
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் - நீர்வேலி
" ச. சோமாஸ்கந்தக் குருக்கள் - மயிலணி
" கிருஷ்ணானந்த சர்மா - நல்லூர்

நன்றியுரை:- சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள் (ஆலய பிரதம குரு)

விழாச் சபையினர்

நீர்வேலி. (47538)



அரியாலைக்கு புகழ் தேடித்தந்தவர் வரிசையில்

யாழ்.அரச அதிபர்

செல்லையா பத்மநாதன்

அவர்களைப் பாராட்டி கௌரவிக்கின்றோம்.

-அரியாலை மக்கள்.

அன்பளிப்பு:-

ராஜன் பின்னல் அகம்

மா. ராஜன், 39, மலர்மகள் வீதி, அரியாலை.

மா. ராஜன், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(47539)


## விசர் நாய் மூவரைக் கடித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 1

காரைநகர் களபூமியில் நேற்று முன்தினம் மூவர் விசர்நாயினால் கடியுண்டனர்.

வீட்டினுள் திடீரெனப் புகுந்த விசர்நாய் அங்கு படுத்திருந்த வயோதிபப் பெண்ணை முதலில் கடித்தது. அதனை அடிக்க வந்த அவரது மகளையும் கடித்து விட்டு வெளியேறி வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவரையும் அது கடித்தது.

சண்முகம் சின்னக்குட்டி (வயது 65) அவரது மகளான சண்முகம்சரஸ்வதி(வயது38), நடராசா (வயது 58) ஆகியோரே கடியுண்டவர்கள் ஆவர். (இ-15)

## திருமலை துறைமுகப்பகுதியில் கப்பல் சேதமடைந்ததற்கான காரணம் தெரியவரவில்லை

கொழும்பு, ஜூன் 1

திருமலைக் கடற் பிரதேசத்தில் கடந்த வியாழனன்று அதிகாலை கிரேக்க நாட்டு சரக்குக் கப்பல் சேதமடைந்ததற்குக் காரணமான தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்த மர்மம் இன்னும் துலங்கவில்லை.

இத் தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்திருக்கலாம் என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சேதமடைந்த கப்பலைத் திருமலை துறைமுகத்தினுள் கட்டி இழுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)


உ

கற்பகன் துணை

தென் கோவை, அருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்

இருபாலை கோப்பாய்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

02 — 06 — 1997 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி 15 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

16 — 06 — 1997 தேர்த்திருவிழாவும்,

17 — 06 — 1997 தீர்த்தோற்சவமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

- தேவஸ்தானம்

கோப்பாய் தெற்கு. (சி/837)



University of Jaffna Srilanka

Postgraduate Diploma in Education

Part - time and Full - time - 1995

The date of closing applications for the Examination for Part - time & Full - time Postgraduate Diploma in Education, has been extended till 16th June 1997.

Examinations originaly scheduled to be held on 20th June, 1997 will be held on 11th July 1997.

-Registrar.

(சி/836)



★பான்சி வகைகள், ★ அலுமினியப் பாத்திரங்கள், ★பிளாஸ்ரிக் வகைகள், ★பாடசாலை உபகரணங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சிற்றி றேடஸ்

இல. 64, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(47543)



விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

O/L வகுப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

O/L பிரிவு II DAY CLASS (8.30-2.00) Sat., Sun. Class (8.00-2.00)

ஆரம்பம்: 06 - 06 - 1997

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.
★ மாதாந்தப் பரீட்சை நடைபெறும்.
★ ஒவ்வொரு பிரிவிலும் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

(47540)


# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

31 ஆம் நாள்



திருமதி
இரத்தினம் கந்தையா

தாயின் மடியில்: 27 — 12 — 1927
இறைவனடியில்: 02 — 05 — 1997

133 ஆம் நாள்



அமரர்
மருதர் கந்தையா
(நீலகண்டு)

தாயின் மடியில்: 12 — 10 — 1917
இறைவனடியில்: 21 — 01 — 1997

திதி: 01 - 06 - 1997

எங்கள் இல்லத்தில் திருவிளக்காய் ஒளிபரப்பி
எல்லோர் மனதிலும் நீங்காத பாச உணர்வின் பிம்பமாக விளங்கிய

**திருமதி இரத்தினம் கந்தையா**

அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தபோது அவரின் துயர் தாங்காது இருந்த எமக்கு ஆறுதல் கூறியும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் மற்றும் அவர் நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது வைத்திய உதவிகள் புரிந்த மருத்துவமணிகளுக்கும், அன்னாரின் இறுதி நாளன்று நடைபெற்ற கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்.

பட்டினசபை ஒழுங்கை,
மானிப்பாய். (47535)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 16 — 05 — 1921



இறைவ அடியில்: 01 — 06 — 1989

திருமதி
அருளம்மா அந்தோனிப்பிள்ளை

எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் நெஞ்சத்தில் என்றும் உங்கள் நினைவுகள் மறையாது. உங்கள் நித்திய வாழ்வுக்காய் இறைவனிடம் மன்றாடுகின்றோம்,

உங்கள் நினைவால் துயருறும்:
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

10, மத்தியூஸ் வீதி,
யர்ழ்ப்பாணம். (47529)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூழ் குடித்தவரின் தொண்டைக்குள் தூண்டில்!

தென்மராட்சி, ஜூன் 1

மீன் சாப்பிடும் போது சில சமயங்களில் மீன் முள் தொண்டைக்குள் சிக்கிவிடுவதுண்டு. ஆனால் மீன் பிடிக்கப் பயன்படும் தூண்டிலே தொண்டைக்குள் சிக்கிக் கொண்டால்......? எப்படியிருக்கும் உபாதை......?.

கூழ் காய்ச்சி சுவைத்துக் குடித்த நுணாவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு அண்மையில் இந்த அனுபவம் ஏற்பட்டது.

மீன் தலையைச் சுவைத்துக் கொண்டிருந்த இவரது தொண்டைக்குள் திடீரென ஒரு பொருள் சிக்கியது. அதனை முள் என நினைத்து வெளியே எடுக்க அவர் பலவாறு முயற்சித்தார். ஆனால் முடியவில்லை.

இறுதியில் அவர் ஆஸ்பத்திரிக்குச் சென்று வைத்தியரின் உதவியை நாட வேண்டியதாயிற்று.

ஆஸ்பத்திரியில் அவரது தொண்டைக்குள் இருந்து ஒரு பொருள் எடுக்கப்பட்டது. அது மீன் முள் அல்ல; தூண்டில்! மீன் தலைக்குள் சிக்கிக் கிடந்த தூண்டில் அவரது தொண்டைக்குள் சென்று சிக்கியது ஆச்சரியந்தான்.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த முத்தையா பாலகிருஷ்னன் (வயது 58) என்பவருக்கே இந்த அனுபவம் நேர்ந்தது.

அவரது தொண்டைக்குள் இருந்து எடுத்த தூண்டிலையும் இந்த செய்தியையும் உதயன் பணிமனைக்கு அனுப்பி வைத்துள்ளார் எமது செய்தியாளர்.

மீன் சாப்பிடுவோரே கவனம்! எச்சரிக்கையாக இருங்கள். தூண்டில் கம்பி போல வேறு பெரும் ஆபத்தான பொருள்களும் சிக்கலாம் அல்லவா?

(ஐ-117)

ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து

# எதிர்வரும் வெள்ளியன்று தமிழகத்தில் ஹர்த்தால்

சென்னை, ஜூன் 1

ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து எதிர்வரும் 6 ஆம் திகதி தமிழகம் முழுவதும் ஹர்த்தால் நடைபெறவுள்ளது.

திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இது தொடர்பாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் 30அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இலங்கை இராணுவத்தால் தொடர்ந்து தாக்கப்பட்டு பந்த திருத்தத்தை] ரத்துச் சொந்த நாட்டில் அகதிகளாகத் தவிக்கும் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளுக்கு எதிராகவும், தமிழக மக்களின் எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையிலும் முழு நாள் ஹர்த்தால் அனுஷ்டிப்பது என்றும் —

இலங்கை அரசின் அனுமதி இன்றி கச்சதீவில் இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கக் கூடாது என்று 1976 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒப் செய்யக் கோருவது என்றும் இந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூட்டாகத் தமிழக முதல்வரைச் சந்தித்து அவர் மூலமாக பிரதமர் குஜ்ராலைச் சந்தித்து தீர்வு ஒன்றைக் காண உதவுமாறு அவரிடம் கோருவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## லயன்ஸ் கழகத்துக்கு அன்பளிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு கனடாவில் உள்ள தென்மராட்சி சேவைகள் ஒன்றியம் இரண்டு லட்சம் ரூபாவை அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் உயர்கல்வி பெறும் வறுமைக் சோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு ''சாவா- லயன்ஸ் கல்விப் புலமைப் பரிசில்'' திட்டத்தின் கீழ் இந்நிதி மூலம் மாதாந்தம் உதவி வழங்க இருப்பதாக கழகத் தலைவர் லயன் இ. கமலநாதன் தெரிவித்தார்.

(ஐ-117)

## பாலர் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி, ஜூன் 1

மறவன்புலோ சிவகவி சனசமூக நிலைய அறவழி பாலர் பாடசாலை சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு நிலையத்தலைவர் இ. வல்லிபுரம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக அறவழிப் போராட்டக் குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (ஐ-117)

## சோனியாவுக்கு. . .

(மூன்றாம் பக்கத் தொடர்)

தார்.

காங்கிரஸின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்யும்கால எல்லை ஏற்கனவே முடிவடைந்து விட்டதால் சோனியா காந்தி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ - 5)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கூட்டங்கள் நாளையும் 5 ஆம் திகதியும் நடைபெறவிருக்கின்றன.

யாழ்ப்பாணக் கோட்டத்துக்கான கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ். கன்னியர்மடம் ம. வித்தியாலயத்திலும்—

நல்லூர் கோட்டத்துக்கான கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் — நடைபெறும் என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ. தானையா தெரிவித்தார். (ஐ-3)

தென் மாகாணசபை உறுப்பினர்களின்

## பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் வடக்குப்போர் முனைக்கு!

### இதை ஆட்சேபிதது சத்தியாக்கிரகம்

கொழும்பு, ஜூன் 1

வடக்கு கிழக்கில் சேவையாற்ற அனுப்பப்பட்டுள்ள தமது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை மீளத் திருப்பி அழைக்குமாறு கோரி தென்மாகாண சபை உறுப்பினர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கிவந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அப்பணியில் இருந்து வாபஸ் பெறப்பட்டு வடக்குப் போர் முனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

''எமக்கு பாதுகாப்பு இல்லை. எமக்கு பாதுகாப்பு வழங்கியவர்களை மீளப் பெற்று பாதுகாப்பு வழங்குங்கள்'' என்று கோரி 24 மாகாணசபை உறுப்பினர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர்.

இவர்களில் 6 பேர் பொது மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் என்றும், ஏனையோர் ஐ. தே. க.உறுப்பினர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-150-3)

## விசர்நாய்க்கடி தடுப்புமருந்து தட்டுப்பாடு

தென்மராட்சி, ஜூன் 1

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கு ஏற்றப்படும் விசர்நோய்த் தடுப்பு மருந்து முடிவடைந்து விட்டதால் இப்பகுதி நோயாளர்கள் இத் தடுப்பூசி ஏற்றுவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

இப்பகுதியில் விசர்நாயினால் கடிபடுவோர் தொகை அதிகரித்து வருவதால் இம்மாத முற்பகுதியில் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து 50 தடுப்பூசி மருந்து பெறப்பட்டு நோயாளர்களுக்கு ஏற்பப்பட்டது.

(ஐ-117)

பண்டத்தரிப்புப் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)
அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,
அங்கத்துவப்பட்டியல் முடிவுறுத்தல்
30 - 06 - 1997

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்துவதற்காக சகல கிளைகளிலும் உள்ள அங்கத்துவ இடாப்புகள் 30 - 06 - 97 உடன் முடிவுறுத்தப்படவுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம். ஒரு முழுப்பங்கின் பெறுமதி ரூபா நூறு (100/-) ஆகும். எனவே முழு அங்கத்துவ பங்குப்பணத்தைக் கொண்டிராத அங்கத்தவர்களிடமிருந்து மீதி பங்குப் பணத்தை 30 - 06 - 97 வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோம். கிளை நிலையங்களில் அல்லது தலைமைக்காரியாலயத்தில் பங்குப்பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய கவனிப்பு:
30 - 06 - 97 இற்கு பின்னர் செலுத்தப்படும் பங்குப் பணங்களுக்குரிய அங்கத்தவர்களது பெயர்கள் கிளைக்குழுத் தேர்தலுக்குரிய அங்கத்துவப் பட்டியலில் இடம் பெறமாட்டாது என்பதனையும், எதிர்வரும் கிளைக்குழுத் தேர்தல் 30 - 06 - 97 இல் உள்ள அங்கத்தவர் பட்டியலின் படி நடைபெறும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ச. செல்வரத்தினம் — தலைவர்
ஆ. நாகராசா — செயலாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
(சி-838)

உ
சாஸ்தா துணை
அனலைதீவு
அருள்மிகு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்
ஜீர்ணோத்தாரண புனராவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்ட மஹாயாக
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

02 - 06 - 97 திங்கட்கிழமை.
காலை 6 மணி முதல் மஹா கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று
06 - 06 - 97 வெள்ளிக்கிழமை.
மு. பகல் 12 - 00 மணி தொடக்கம் மறு நாள் சனிக்கிழமை மு. பகல் 1-00 மணி வரை எண்ணெய்க் காப்பும்,
08 - 06 - 97 ஞாயிற்றுக்கிழமை
அதிகாலை 5 மணி 30 நிமிடம் முதல் 6 மணி 35 நிமிடம் வரை வரும் சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும்.
குறிப்பு:- பழைய நேரப்படி எழுதப்பெற்றது.

பிரதிஷ்டா பிரதமகுரு
''வேதாகமாமணி, சிவாகம கிரியா சூடா மணி''
சிவஸ்ரீ பால வைத்தியநாத சிவாச்சாரியார்
ஊரெழு
சுபம்!
''சுவாமியே சரணம் ஐயப்பா''
அனைவரும் வருக! இறை அருள் பெறுக!
ஷ பரிபாலன சபை
(47537)

YARL HALL கல்விநிலையம்
93 A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(திருமறைக்கலாமன்றம் முன்பாக)

O/L DAY CLASS
ஆரம்பம்: 02 - 06 - 1997 திங்கள்
காலை 8-00 மணி

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — B.P. பாஸ்கரன்
சமூகக்கல்வி — K.S. முத்துலிங்கம்
ஆங்கிலம் — T. சகாதேவன்
தமிழ் — S. முகுந்தன்
வர்த்தகம் — M. குயின்ரன்ஸ்

★ மாலை நேர துரித மீட்டல் வகுப்பும் ஆரம்பமாகின்றன.

- நிர்வாகி
(47547)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒழுங்கு முறை தேவை

யாழ்ப்பாணத்து மக்கள் கல்வியைத் தமது பெருஞ் செல்வமாகக் கருதுபவர்கள். ஏழ்மையின் மத்தியிலும் தமது பிள்ளைகளுக்குக் கல்வி அறிவூட்டுவதில் ஆர்வம் காட்டுபவர்கள்.

கல்விச் சாதனங்களில் முதன்மையானவை நூல்களே. அதனால் கிராம மட்டத்திலும் நூல் நிலையங்கள் குடாநாட்டில் இயங்கின. அவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போன்று விளங்கியது தான் யாழ்ப்பாணம் பொது நூலகம்.

மொத்தத்தில் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் அறிவு நாட்டத்தைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுச் சின்னமாக அது திகழ்ந்தது. பொலீஸ்காரர் ஒருவர் சுடப்பட்டுக் கொலையுண்டார் என்பதற்கு வஞ்சம் தீர்க்கக் கட்டவிழ்த்து விடப்பட்ட படை வன்செயல்களின் போது, அறிவொளி பரப்பிய நூல் நிலையத்தின் மீதும் இலக்கு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் அறிவு நாட்டத்தை நசுக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட இந்தப் பண்பாட்டுப் படுகொலை, தெற்கின் அரசியல்வாதிகள் நெடு நாளாகத் தீட்டிய வஞ்சகச் சதியே அன்றிக் கோப மூட்டப்பட்டதால் விளைந்த திடீர் நிகழ்வல்ல.

தமிழ் மக்களை அரசியல் அடிமைகளாகவும், இரண்டாந்தரப் பிரசைகளாகவும் ஒடுக்கி வைக்க வேண்டும் என்ற பெரும் சூழ்ச்சி நெருப்பின் சில நாக்குகளே நூற்களஞ்சியத்தை விழுங்கின.

அழிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகத்தை புனர் நிர்மாணம் செய்து மீள்விக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார். அதற்கான திட்டம் ஒன்றை ஆரம்பித்துமுள்ளார். தென்னிலங்கை மக்களை ஒவ்வொரு செங்கல்லும் ஒவ்வொரு நூலும் அன்பளிப்புச் செய்து தமது மீள்விப்புப் பணிக்கு உதவுமாறு கேட்டிருக்கிறார்.

முந்திய அரசாங்கம் செய்த பாவத்துக்குப் பிராயச் சித்தமாகத்தான் யாழ்ப்பாண நூல் நிலையத்தை மீள்விக்க சந்திரிகா முன்வந்திருக்கிறாரா அல்லது அரசியல் லாபம் பெறும் நோக்குடன் தான் இம்முயற்சியில் இறங்கியிருக்கிறாரா என்பது வேறு விடயம்.

ஓர் அரசாங்கத்தின் தலைவி என்ற வகையில் அவர் இந்தப் பணியை நிறைவேற்றி முடிப்பாராயின் தமிழ் மக்களின் நன்றிக்குரியவராவார். கால அட்டவணை ஒன்றை வகுத்து அதற்குள் யாழ். நூல் நிலையம் மீள்விக்கப்படுமாயின் குடாநாட்டு மக்களுக்குச் செய்த பேருதவியாக அமையும். ஜனாதிபதியின் நன் முயற்சி வெற்றி பெறுக. யாழ்ப்பாணப் பொது நூலகம் மீள்விக்கப்பட்டு மீண்டும் அறிவொளி பரப்ப வேண்டும் என்பதே எல்லோரது விருப்பமும் ஆகும்,

போர் ஒழிந்த அமைதியான சூழ்நிலையிலேயே அறிவும் பிரகாசிக்க வாய்ப்புண்டு. அதனையும் மனதிலிருத்திச் செயற்பட வேண்டும் ஜனாதிபதி. போரைத் தொடர்ந்து கொண்டு நூலகத்தை மீள்விப்பது என்பது ஒழுங்குமுறை மாறிய செயலாகிவிடும்;

# நவம்பருக்கு முன்னர் தீர்வுத்திட்டம்

# கூட்டணியிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

உத்தேச பிராந்திய சபைகளுக்கு அதிகாரங்களைவழங்கும் அரசியல் தீர்வுத் திட்டத்தை அடுத்த நவம்பர் மாத வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தனது அரசு விருப்பம் கொண்டுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை எம். சிவசிதம்பரம் தலைமையில் கூட்டணிப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்து மூன்று மணித்தியாலங்கள் கலந்துரையாடினர்.

தீர்வுத் திட்டத்தில் முக்கிய விடயங்களான அதிகார அலகு, காணி உரிமை மற்றும் பொலீஸ் அதிகாரங்கள் ஆகிய விடயங்களில் ஐ. தே. கட்சியுடன் புரிந்துணர்வு உள்ளதால் தீர்வுத் திட்டத்துக்கு நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறுவதில் அதிகம் சிக்கல் இருக்காது என இக்கலந்துரையாடலின்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து வடக்கு — கிழக்கு மக்கள் தீவிரமாக சிந்திப்பதற்கு அந்தப்பகுதிகளில் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் அப்பொழுது கோரிக்கை விடுத்தார்.

''தமிழ் மக்கள் மனித உரிமைகள் மீறல்கள் உட்பட சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அரசியல் தீர்வு குறித்து வடக்கு - கிழக்கு மக்கள் தீவிரமாகச் சிந்திப்பதற்கு அவர்கள் அனுபவித்து வரும் துயர்கள் முதலில் நிறுத்தப்படவேண்டும் என்றும் சிவசிதம்பரம் கூறினார்.

ஈ. பி. டி. பி. அமைப்பு கோரும் உத்தேச இடைக்கால சபை குறித்த யோசனையை கூட்டணி எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

## சிமெந்துத் தொழிற்சாலையை இயக்க அமைச்சு அனுமதி

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக தொழிற்சாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

தொழிற்சாலையை இயங்கச் செய்வதற்கு வசதியாக அங்கு தங்கியுள்ள படையினரை அங்கிருந்து விலக்கிக் கொள்ளவும் பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழனன்று இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியதாகவும் அறியவந்தது.

அடுத்த இரு மாதங்களில் தொழிற்சாலையை இயங்கச் செய்துவிட முடியும் என்று தொழிற்சாலை வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (இ-ஐ-150)

## கடத்தப்பட்டவர் தப்பி வந்தார்

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பில் இனந்தெரிய தோரால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலீஸ்காரர் ஒருவர் அவர்களின் பிடியில் இருந்து தப்பி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆரையம்பதி பிரதேச சபைத் தலைவர் கே. நவரத்தினராஜாவின் மெய்ப்பாதுகாவலராக இருந்த பொலீஸ் கான்ஸ்டபிளான பி. சிவதாசன் என்பவரே கடத்தப்பட்டிருந்தார்.

கடந்த 8 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து அவர் கடத்தப்பட்டிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை அவர் அங்கிருந்து தப்பி வந்து களுவாஞ்சிக்குடிப் பொலீஸில் ஆஜரானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## செயற்குழு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன்1

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 3:00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். (இ)

# பக்தி நூல்களைப் படிக்கும் பழக்கத்தை பரப்ப வேண்டும்

## திருக்கோவையார் வெளியீட்டு விழாவில் துணைவேந்தர்

நல்லூர், ஜூன் 1

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளை விட கனடாவிலும் சைவமும் தமிழும் வளர்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மாறிவரும் சமூக தொழில் நுட்பத்தின் முன்னேற்றங்கள் ஊடாக அங்கு தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பாடல்களை தமிழர்களுடைய இல்லங்களிலே கேட்க முடிகிறது. இங்கு மக்களிடையே வசதிகள் இருப்பினும் கூட பக்தி நெறிகளைஉணர்த்தும் நூல்களையோ அன்றேல் அறிவு பூர்வமான நூல்களையோ வாங்கிப்படிக்கும் பழக்கமும் ஆர்வமும் இல்லாதிருப்பது கவலைக்குரியது.

''திருக்கோவையார்'' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ''திருக்கோவையார்'' நூல் வெளியீட்டுவிழா துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை தமது உரையில்—

சைவ உலகிற்கு குறிப்பாக எமது பகுதியில் உள்ள சைவ மக்களுக்கு நல்லை ஆதீனம் செய்யும் பணிகளில் நூல் வெளியீடு பாராட்டப்பட வேண்டியதாகும். திருக்கோவையார் சமயபாடத்திற்கு மட்டுமல்ல இந்துநாகரிகம், தமிழ் சிறப்பு கலைப் பகுதிக்கும் ஒரு பாடமாக இருப்பதால் இந்நூல் மாணவர்களுக்கு இன்றியமை[illegible]தாகிறது. எமது பல்[illegible] கழக நூலகத்திற்கு பலவகை நூல்கள் தேவைப்படுகின்றன. பொதுமக்கள் பயனுள்ள நூல்களை பல்கலைக் கழக நூலகத்திற்கு வழங்கி உதவவேண்டும். மாணிக்கவாசகரின் இந்த நூலை சிரமங்களின் மத்தியிலும் வெளியிட்டதன் மூலம் நல்லை ஆதீனம் எமது சமயவளர்ச்சிக்குரிய அத்தியாவசியமான ஒரு கடமையை நிறைவேற்றியுள்ளது-என்றும் தெரிவித்தார்.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமை உரையில் கூறியதாவது:-

மேலெழுந்தவாரியாக நோக்கின் சிற்றின்ப மகிழ்வு காணப்படினும் திருக்கோவையாரை ஆழ்ந்து படித்தால் அதன் பக்தி நெறி தெரியும். எந்த நோக்குடன் அதனைப் படிக்கின்றோமோ அந்தக் கருத்துக்களுக்கேற்ப அது புலப்படும். பலதரப்பட்ட பயனை படித்தவர்களுக்கு அளிக்கும் சிறப்பு அதற்குண்டு.

பக்திச் சுவை சொட்ட இலக்கண, இலக்கிய நயத்துடன் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய இந்த நூலை மக்களிடையே உயர்ந்த சிந்தனைகள் உதிக்க வேண்டும் என்ற பெருநினைவுடன் வெளியிட்ட நல்லை முதல்வருக்கும் உதவியாளர்களுக்கும் நாம் பெரிதும் கடப்பாடுடையோம் —என்றார்.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையில் கூறியதாவது:-

இந்தியாவில் ஆலயங்களில் பன்னிரு திருமுறைகளும் பாடப்படுகின்றன. எமது [illegible] என்பதற்கிணங்க இன்று இந்த நூலை வெளியிட்டுள்ளோம். இடம் பெயர்ந்து சென்ற போது மீசாலையில் பண்டிதர் சங்கரப்பிள்ளையும் சாவகச்சேரி மக்களும் இதற்கான ஊக்கத்தை எமக்குத் தந்து கொண்டிருந்தனர். இறைவனே அடி எடுத்துக் கொடுக்க மாணிக்க வாசகரால் அருளப்பட்ட இந்நூலை நாம் எல்லாவற்றையும் இழந்த போதும் முருகன் அவதரித்த இந்த நல்ல நாளில் வெளியிடக் கிடைத்தமை எல்லோருக்குமே மன மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த நூல்களில் தெய்வீக சிந்தனை, மனிதர்களை வாழவைக்கும் நெறிகள் இருப்பதால் எல்லாத் தீமைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவும் இந்த மண்ணில் சந்தோஷமான சமாதான நிம்மதியான வாழ்வு கிடைக்கவும் பன்னிரு திருமுறைகள் மற்றும் எமது சமயத்தின் பதிகங்களைப் படிக்கும் வழக்கம் எல்லோரிடத்திலும் உருவாக வேண்டும் — என்று தெரிவித்தார். நாயகி பாவம் எனக் கொண்டு வாழ்வின் நெறி முறைகளை விளக்கும் வகையிலும் செய்யப்பட்ட நூல் திருக்கோவையார். தொண்டு வளர திருமுறைகள் பேணப்பட வேண்டும் என்பதையும் இந்நூலின் மூலம் நாம் உணர முடிகிறது. இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

திரு. க. சிவராமலிங்கம், ஆதீன மேலாளர், திரு. ச. இராமநாதன், திரு. வ. பேரின்பநாயகம் ஆகியோரும் விழாவில் உரை நிகழ்த்தினர்.

நூலின் முதல் பிரதியை துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளையிடம் இருந்து யாழ். பல. நோ, கூ. சங்கத் தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் பெற்றுக் கொண்டார். (அ-111)

## மட்டக்களப்பில் சிங்களவர் பலி

மட்டக்களப்பு, சந்திவெளியில் நேற்றுக் காலை சிங்களவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இராணுவத்துடன் தொடர்பு வைத்திருந்ததுக்காகவே இவர் சுடப்பட்டார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தின்போது 50 வயது நிரம்பிய தமிழ் பெண் ஒருவரும் காயமடைந்தார். (இ-21)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 1

கோப்பாய் கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளைதிங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ)

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

மஞ்சத் திருவிழா 21 ஆம் திகதியும், தேர்த்திருவிழா ஜூலை மாதம் 3 ஆம் திகதியும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-3)

★ ★ ★

பாசையூர் புனிதஅந்தோனியார் கோயில்திருவிழா இன்று (ஞாயிறு) மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (ஐ)

★ ★ ★

ஏழாலை புனித இசிதோர் பெருவிழாவில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7. 45 மணிக்கு திருப்பலியும், புனிதரின் திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன. (ஐ-4)

★ ★ ★

திக்கம் நீர்வளை விநாயகர் நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5. 52 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான அந்தரீத பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்ட கிரியா கால நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு ஆரம்பமாகின்றன. நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (இ-4)

★ ★ ★

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-4)

## நாளை

**வைகாசி 19**

திங்கட்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 4.25 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

மாலை 6 33 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 11.52-1.22

ராகுகாலம்: 7.22-8 52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

### திரு. செ. பத்மநாதன்

அவர்கள் யாழ். மக்களுக்கு ஆற்றி வரும் நற்பணிகள் போற்றுதற்குரியவை. அவர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து எம்மக்களுக்கு சேவையாற்று மாறு எல்லாம் வல்ல அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**மேகாஸ் வீடியோ**
உரிமையாளரும், ஊழியர்களும்.
(சி/839) கண்டிவீதி, அரியாலை.



## வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட அரச அதிபர்

### திரு. செ. பத்மநாதன்

அவர்களைக் கௌரவிக்கும் இந்நாளில் அவர் மக்களுக்கு ஆற்றிவரும் அளப்பரிய சேவை மேலும் சிறப்படையவும் அவர் பல்லாண்டு நீடூழி வாழ்க என வாழ்த்தி மகிழ்கின்றோம்.

தலைவர்,
இயக்குநர், ஊழியர்கள்,
வடமாகாண கடற்தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(47556)



## KALAIMANI INSTITUTE

மானிப்பாய்

## O\L DAY CLASS

கணிதம்
திரு. S K.N. நவறட்ணராஜா (நவராஜா)
தமிழ்
பண்டிதர் தயாசீலன்
சமூகக்கல்வி
செல்வி R. வரதராஜா
சமயம்
திரு. குமரன்
விஞ்ஞானம்
திரு. S. சதானந்தன்
ஆங்கிலம்
திரு பரிதிதாஸ்
வர்த்தகம்
திரு. சிவச்சந்திரன்
சித்திரம்
திரு. பரிதி

**ஆரம்பம்:- 2-6-97 திங்கள் காலை 8 மணி**

## A L 99 கலை வர்த்தகப்பிரிவு

பொருளியல்
திரு: பரமேஸ்வரன்
கணக்கியல்
திரு. ராஜ்
அளவையியல்
திரு. சிறிகுமார்
வணிகக்கல்வி
திரு. சிவச்சந்திரன்
வணிக புள்ளிவிபரவியல்
திரு. இரவீந்திரன்
தமிழ் இந்துநாகரிகம்
இந்து சமயம்
திரு. கோகலை
நாடகமும் அரங்கியலும்
திரு. M சந்திரன்

**ஆரம்பம்:- 2-6-97 திங்கள் மாலை 3 மணி**
(47257)



## கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்லூரியின் அதிபர்
திரு ச. இராமலிங்கம்
அவர்களின் அருமைத் தாயார்

### திருமதி சரவணை பொன்னு

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது இதய பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கழகமும் மாணவர்களும்
யா/ வட்டு. இந்துக் கல்லூரி,
சித்தன்கேணி.
(47552)


## இளம் பெண் எரிகாயம்

குப்பி விளக்கு தட்டுண்டு உடையில் தீப்பற்றி எரிந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உடல் முழுவதும் எரி காயத்துக்கு உள்ளானார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் 7 மாதக் குழந்தையின் தாயாரான ஞானசேகரம் குமுதா (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார். (இ-15)

## மன்னாருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

எடுத்துச் சென்றன.

தற்பொழுது உணவுத்தடை நீக்கப்பட்டதை அடுத்து உணவு லொறிகள் அங்கும் அனுப்பப்படவுள்ளன. (இ-21)

## தி. மு. க...

(முதலாம் பக்கத் தொடர்)

தி.மு.க. வின் பொதுக் குழு நாளை திங்கட்கிழமை முடிவு செய்ய உள்ளது.

இந்த விவகாரம் பொதுக் குழுக் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்கப்படும் என்று தி.மு.க. தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து இந்த ஹர்த்தால் நடத்தப்பட இருப்பது தெரிந்ததே.

(3 ஆம் பக்கமும் பார்க்க)

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

முனையிலும் உள்ள படை அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் தந்திரோபாயங்களை சரியாக விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும் —

வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதை விட படையினருக்கு வேறு நோக்கங்களும் உள்ளனவா என்பதை விடுதலைப் புலிகளாலும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதிக்குப் பின்னர் நெடுங்கேணிப் பகுதியில் இருந்தும்,

24 ஆம் திகதிக்குப் பின்னர் ரம்பைக்குளம் பகுதியில் இருந்தும் படையினர் நகர்வு எதனையும் மேற்கொள்ளவில்லை.

வவுனியா—யாழ். வீதியில் இதுவரை கைப்பற்றப்பட்ட பகுதியில் இரு மருங்கிலும் அணைகளையும், காப்பரண்களையும் அமைப்பதில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கைப்பற்றிய பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தாமல் முன்னேறுவதில் அர்த்தம் இல்லை என்பதை படையினர் நன்கு புரிந்துள்ளனர்—என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ-4-10-150)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

டுள்ளது.

பௌத்த பிக்கு ஒருவர் தொடர்பான விவரணச் சித்திரத்தை தயாரிக்கப் போவதாக கூறியே 'பீயூஜி' ரெலிவிஷன் நிறுவனம் இலங்கை வந்ததாகவும் —

அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு அவர்கள் வடக்கு யுத்தம் பற்றிய விவரணச் சித்திரத்தை தயாரித்துக் கொண்டு சென்று விட்டதாகவும் தற்போது கூறப்படுகிறது.

பிரஸ்தாப ஜப்பானிய ரெலிவிஷன் நிறுவனம் இலங்கையில் இருந்து வெளியேறிய போது விவரணச் சித்திரம் அடங்கிய வீடியோ கஸெட்டை அதிகாரிகளின் பார்வைக்குச் சமர்ப்பிக்கவில்லை என்றும் —

கமெராவில் தொழில் நுட்பக்கோளாறு ஏற்பட்டுவிட்டதாகக் கூறி அதிகாரிகளின் [illegible] சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

## ப. நோ. கூ. சங்க...

(முதலாம் பக்கத் தொடர்)

என நிர்ப்பந்தித்துள்ளார்கள். ஆனால் பணம் செலுத்தப்படவில்லை. பணம் செலுத்தப்பட்டிருந்தால் அந்தப் பொறுப்பு பாவனையாளர் மீது சுமத்தப்படும் வகையில் பொருள்களின் விலைகள் எக்கச்சக்கமாக உயர்ந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கை மற்றும் அந்த இயக்க உறுப்பினர்களின் செயற்பாடுகள் மற்றும் பிரசன்னம் ஆகியவை பற்றி தெரிந்திருந்தும் ப. நோ. கூ. சங்க உத்தியோகத்தர்கள் அத்தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கவில்லை. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இது ஒரு குற்றமாகும்.

மேலே கூறப்பட்ட காரணங்களால் மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராகப் பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக பொலீஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

எனவே பொதுமக்கள் தமது சொந்த மற்றும் பொது நன்மை கருதி விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களை அதிகாரிகளுக்கு வழங்காமல் விடுவதைத் தவிர்க்குமாறு ஆலோசனை வழங்குகின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-இ-10)

## பொலிஸாரால்...

(முதலாம் பக்கத் தொடர்)

யில் உள்ள சுயாதீன குடியுரிமை சங்க (பிறாக்) அலுவலகத்தில் இருந்து எஸ். எம். ஜி. துப்பாக்கி ஒன்றையும், 2கிரனேட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இது தொடர்பாக சிலாபத்தில் ஒருவரையும், கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கொழும்பில் கைதானவர் தாம் குறிப்பிட்ட தமிழ்க்கட்சியின் அலுவலகத்தில் தங்கி இருப்பதாகவும்—

தேடப்படும் சரத் சில்வா என்ற நபரும் அங்கேயே தற்சமயம் இருப்பதாகவும்—கூறினாராம்.

இதையடுத்து சிலாபம் தலைமை இன்ஸ்பெக்டர் ஹில்மன் சில்வா இவரைக் கைது செய்ய அந்தத் தமிழ்க்கட்சியின் அலுவலகத்துக்குச் சென்றார்.

தேடப்படும் நபர் தம்முடன் உள்ளதாகவும்—

பாதுகாப்பாக அவரை தாம் பொலிஸாரிடம் ஒப்படைப்பதாகவும்— அங்கு பதில் கூறப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-21-3)


## G. C. E. AL '97

கணித - உயிரியல் - கலை - வர்த்தக
பிரிவுகள் - எல்லாப் பாடங்களுக்கும்

### மாதிரிப் பரீட்சை

ஆரம்பம்: 9 – 6 – 97

மேலதிக விவரங்களுக்கு:
**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(47554)



## நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.
அரசடிப் பிள்ளையார் கோவில் அருகில், கோண்டாவில்

மாணவர்களே!
மீண்டும் ஒரு தவறைச் செய்யாதீர்!
திறமையான ஆசிரியர்களைத் தெரிவுசெய்யுங்கள்.

## O/L DAY CLASS

**ஆரம்பம் 02-06-1997**

எமது நிரந்தரமான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு

| | |
|---|---|
| கணிதம் | — திரு. எஸ். கருணாகரன் |
| விஞ்ஞானம் | — திரு. இரா. அருட்செல்வம் |
| சமூகக்கல்வி, வரலாறு | — திரு. இரா. கணேஷ் |
| தமிழ் | — திரு. ஞானதிருக்கேதீஸ்வரன் |
| ஆங்கிலம் | — திரு. எஸ். சந்திரமௌலி |
| சமயம் | — திரு. N. தரன் |
| வர்த்தகமும், கணக்கியலும் | — திரு. பரமசிவம் |

★ கணிதம் நாள்தோறும் 3 மணித்தியால வகுப்புகள்
★ வாரந்தோறும் வினாவிடை வகுப்புகள்
(47258



## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASS

| | |
|---|---|
| கணிதம் | — திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | — திரு. இரா. செல்வவடிவேல் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — திரு. இரா. கணேஷ் |
| தமிழ் | — திரு. T. ஆர்த்தீகன் |
| ஆங்கிலம் | — திரு. T. சகாதேவன் |
| வர்த்தகம் | — திரு. T. அரவிந்தன் |
| சமயம் | — திரு. K. இராசலிங்கம் |

★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
★ கணிதம் கடந்தகால 27 வினாத்தாள்களின் பகுதி I, பகுதி II வினாக்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

**ஆரம்பம்: 04-06-1997 புதன்கிழமை காலை 8-00 மணி**
(47549)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org